# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



## பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரை - 2018

# "நவதாரண்மைப் பொருளாதாரங்களும் பொருளியற் சிந்தனையும்"


பேருரை வழங்குபவர் :

கலாநிதி அமீர் அலி

பொருளியல் துறை,
மேர்டொக் பல்கலைக்கழகம்,
மேற்கு அவுஸ்திரேலியா.


கைலாசபதி கலையரங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

03.05.2018

# பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரை - 2018

# நவதாரண்மைப் பொருளாதாரங்களும் பொருளியற் சிந்தனையும்

UNIVERSITY OF JAFFNA LIBRARY

பேருரை வழங்குபவர்

கலாநிதி அமீர் அலி

பொருளியல் துறை,
மேர்டொக் பல்கலைக்கழகம்,
மேற்கு அவுஸ்திரேலியா.

P10026

**03.05.2018**



பேராசிரியர் சு.வித்தியானந்தன்

**Prof.S.Vithiananthan**

# துணைவேந்தரின் ஆசிச்செய்தி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணை வேந்தரும், முது பெரும் தமிழறிஞர்களில் ஒருவருமான பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களின் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் நினைவுப்பேருரையினை பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களின் மாணவரும், அவர் மீது மிகுந்த அபிமானம் கொண்டவருமான கலாநிதி அமீர் அலி அவர்கள் "நவதாராண்மைப் பொருளாதாரங்களும் பொருளியற் சிந்தனையும்" எனும் தலைப்பில் நிகழ்த்தவுள்ளார்.

பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள் தமிழ்ப்பேராசிரியர் என்ற முறையிலும் பல்கலைக்கழக துணைவேந்தர் என்ற முறையிலும், ஆற்றிய பணிகள் தமிழ்மக்கள் மனங்களில் இன்றும் பசுமையாக உள்ளன. பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள் மொழிப்பற்றுடன், தமிழரின் கலைகளிலும் பண்பாட்டிலும், சமூக அரசியல் மேம்பாட்டிலும், அக்கறை கொண்டிருந்தார். சிறப்பாக நாட்டுக்கூத்துக்கு புதியதோர் உயிர்ப்பினை வழங்கும் முயற்சியில் ஈடுபட்டார். தமிழாராச்சிமாநாடுகளிற் பங்குபற்றுவதிலும், அவற்றை ஏற்பாடு செய்வித்து நடத்துவதிலும் அவர் பேரார்வம் கொண்டு விளங்கினார். இத்தகைய தமிழ்ப் பெரியாரின் நினைவுப்பேருரை நமது பல்கலைக்கழகத்தில் நடத்தப்படுவது பெருமகிழ்ச்சி தருவதாகும்.

மேற்படி நினைவுப் பேருரை வழங்கவிருக்கும் கலாநிதி அமீர் அலி அவர்களை வாழ்த்தி வரவேற்கின்றேன்.

பேராசிரியர்.இ.விக்னேஸ்வரன்,
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## பேராசிரியர்.சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரை

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டு மாசிமாதத் திங்களொன்றில், இலங்கைப் பல்கலைக்கழகப் பேராதனை வளாகத்தின் புவியியல் மண்டபத்தில், பொருளியல் துறையிலே, என் உயிர்மொழியாம் தமிழ் மொழியில் இறுதியாக விரிவுரையாற்றி நாற்பத்தோராண்டுகளின் பின்னர், மீண்டும் அதே துறையில் அதே மொழியில், என் நினைவைவிட்டும் என்றும் நீங்காத தமிழ் இலக்கணப் பேராசானும், பழகுதற்கினிய ஒரு பல்சுவைப் பண்டிதனுமாகிய, சு.வி அல்லது வித்தி என்று செல்லமாக அன்றைய பட்டதாரி மாணவர்களும், அவருடன் நெருங்கிப் பழகியவர்களும் அழைத்த பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களை நினைவுகூர்ந்து, அவரைப் பெற்றெடுத்த, இலங்கைத் தமிழர்களின் மகுடநகரான இந்த யாழ்நகர் மண்ணிலே, இப்பல்கலைக்கழக மண்டபத்தில் உரையாற்ற எனக்கு வாய்ப்பளித்த இதன் துணைவேந்தர், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், நிர்வாகிகள், பட்டம்பெறக் காத்திருக்கும் மாணவ மாணவிகள் அனைவருக்கும், மேலும் இந்த நிகழ்வில் நான் நினைவு பேருரையை வழங்குவதற்குக் காரணமாக விருந்த என் நண்பன் பேராசிரியர் சிவசேகரம் அவர்களுக்கும் என் நன்றியை முதற்கண் செலுத்துகிறேன்.

என் பிரதான உரையினை ஆரம்பிக்குமுன் பேராசிரியர் வித்தியானந்தனைப்பற்றிய சில நினைவுகளை இச்சந்தர்ப்பத்தில் உங்களுடன் பகிர்ந்துகொள்வது பொருத்தமென நினைக்கிறேன். 1960ஆம் ஆண்டு பேராதனை வளாகப் பட்டப்படிப்பின் முதலாவது வருடத்தில் தமிழ்மொழியை ஒரு பாடமாகக் கற்ற சுமார் எழுபது

மாணவர்களுள் நானும் ஒருவன். பிரதி வெள்ளிக்கிழமையும் வித்தியானந்தனின் இலக்கண விரிவுரை காலை பதினொரு மணிக்கு நடைபெறும். மற்றைய விரிவுரையாளர்கள் சிலரின் விரிவுரைகள் எப்போது முடியுமென்று நான் அங்கலாய்த்திருக்க வித்தியின் விரிவுரை இன்னுங்கொஞ்ச நேரம் நீளாதா என்று ஏங்கியிருப்பேன். அந்த அளவுக்கு பண்பட்ட நகைச்சுவையுடன் தமிழ் இலக்கணத்தை நன்னூல் சூத்திரங்களுடன் வாழைக்கனியில் ஊசி ஏற்றுவதுபோன்று புகட்டுவார். பல சந்தர்ப்பங்களில் அவரது சிலேடைசெறிந்த சொற்பிரயோகங்கள் மாணவிகளை மெய்சிலிர்க்கச் செய்யும். அதில் எங்களுக்கோ ஒரு தனிப்பட்ட கிளுகிளுப்பு. என் வாழ்க்கையில் எனக்குக்கிடைத்த வரப்பிரசாதமொன்றென்னவெனில் எனக்குத் தமிழ்மொழி கற்பித்த ஆசிரியர்கள். ஆரம்பப் பள்ளியிலே ஆரையம்பதி தந்த ஒரு சோமசுந்தரம், இடைநிலைப் பள்ளியிலே கொக்குவில் தந்த ஓர் இரத்தினம், உயர்நிலைப் பள்ளியிலே கரவெட்டி தந்த ஒரு சிவத்தம்பி, பல்கலைக்கழகத்திலே தெல்லிப்பளை தந்த ஒரு வித்தியானந்தன் என்றவாறு அறிவாற்றலும், கடமையுணர்வும், அன்பு உள்ளமும் கொண்ட தமிழ் ஆசான்களை நான் குருக்களாகப் பெற்றமை நான் செய்த பாக்கியம். வித்தியானந்தன் அவர்களுக்கு எனது முஸ்லிம் சமூகத்தின்மேல் ஓர் அலாதியான பற்றுண்டு. அந்தப் பற்றின் வெளிப்பாடாகவே அவரது 'மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள்' என்ற நூலும் 'கலையும் பண்பும்' என்ற நூலும் வெளிவந்தன. இரண்டாவது நூலை முஸ்லிம் சமூகத்தின்மேல் அவருக்கிருந்த அன்பினால் 'பிறையன்பன்' என்ற புனைப்பெயரில் வெளியிட்டார். ஏடறியா இலக்கியங்களாகவும், பள்ளிப்படிப்பறியா கிழக்கிலங்கைப் பாமர முஸ்லிம்களின் அதுவும் அங்கு வாழ்ந்த முஸ்லிம் பெண்களின் நினைவிலும் நாவிலும்

உலவிவந்த நாட்டுக் கவிகளாகவும் கவனிப்பாரற்றுக்கிடந்த அப்பாடல்களைத் தேடித் தொகுத்துப் பண்டிதரும் படித்துச் சுவைக்கும் ஏட்டிலக்கியமாக்கித் தமிழுள்ளவும் அக்கவிகளை வாழவைத்த வித்தகன் வித்தியானந்தன். அதேபோன்று, கிழக்கு மாகாணத்தின் கிராமங்களின் கோயில் முன்றங்களிலே வருடந்தோறும் சித்திரை மாதத்தில் தனியே ஆண்கள்மட்டும் இரவோடிரவாக ஆடிக்களித்து மறைந்துபோகும் நிலையிற்கிடந்த கூத்துக்கலைக்குப் புதுமெருகூட்டி, கொழும்பிலே லயனல்வென்ற் மண்டப அரங்குவரை அதைக் கொண்டுசென்று, ஆங்கில மோகங்கொண்ட கருநிற வெள்ளைக்காரத் தமிழரும் கைதட்டிக் களிக்குமாறுசெய்த கலாஞானி வித்தியானந்தனுக்குக் கலைமகளும் கைகூப்புவாள் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கையுண்டு.

அக்கூத்துக்களுள் ஒன்றுமட்டும் என் நினைவைவிட்டு என்றுமே அகலாது. அதுதான் கர்ணன் போர் என்ற வடமோடி நாடகக்கூத்து. இந்த நாடகத்தில் கர்ணன் பாத்திரத்தை என்னை ஏற்று நடிக்குமாறு அவர் வலியுறுத்தினார். எனக்கு அன்று வளமான குரலிருந்ததால் பாடுவதற்கு நானே பொருத்தமானவன் என அவர் நினைத்தமையும், ஒரு முஸ்லிமைக் கூத்துக்கலைக்குள் புகுத்தி இரு சமூகங்களுக்கிடையேயுமுள்ள கலைத் தொடர்பை வலுவாக்கவேண்டும் என அவர் விரும்பியமையும் அவரின் தெண்டிப்புக்குக் காரணமாக இருந்தது. ஆனால் பாடலுக்கேற்ப என்கால்கள் ஆடமறுத்துவிட்டன. பயிற்சியும் பயனளிக்காததால் அப்பாத்திரம் இறுதியில் பேராசிரியர் மௌனகுருவைச் சென்றடைந்து, அவரின் அபாரதிறமை அரங்கு நிறைந்த கரகோஷத்தையும், அனைவரின் பாராட்டுகளையும் அவருக்குப்

பெற்றுக்கொடுத்தது. இருந்தும், வித்தி என்னைக் கைவிடவில்லை. மேடையொழுங்கை என்னிடம் ஒப்படைத்தார். கர்ணன் போர் அரங்கேறிய மேடைகளுக்கெல்லாம் என்னையும் அழைத்துச் சென்றார். இதனால் நான் அவரின் கலைத் தோழனானேன். வித்தியானந்தனிடம் நான் கண்ட விசேட பண்பு அவருடைய இனபேதமற்ற மனிதாபிமானம். இந்த உண்மையை இன்று இவ்விரு சமூகங்களுக்கிடையேயும் நிலவுகின்ற முறுகலான சூழலை மனதிற்கொண்டு வலிந்துரைக்க விரும்புகிறேன். எப்போதுமே எனது மத கலாச்சார வேறுபாடுகளுக்கு மதிப்பளித்து என்னைச் சமநிலையில் வைத்துப் பழகிய சமவுடமைவாதி அவர். தாம் சமவுடமைவாதிகளென்று வெளிவேஷம் போட்டுக்கொண்டு சாதிமதப் பாகுபாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த அன்றைய பேராசிரியர்கள் பலரின் மத்தியில் வித்தி ஒரு புறனடை. 1967ஆம் ஆண்டு ஆனி மாதம் ஏழாம் திகதியில் முஸ்லிம் கல்விமான் ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்களுக்கு வித்தி எழுதிய மடலொன்றில் சைவ மகா சபையிலே அஸீஸ் அவர்கள் அதற்கு முந்திய வாரம் தமிழிற் பேசிய பேச்சை மனதாரப் புகழ்ந்தும் அதே சபையில் அதே மேடையில் சொல்லின் செல்வன் செ. ராசதுரை பேசிய பேச்சு ஒரு "தோல்வி" என்றும் குறிப்பிட்டு, மீண்டும் ஒரு முறை அஸீஸ் அவர்கள் அச்சபையிற் பேசவேண்டுமென்றும் அழைப்பு விடுத்தமை முஸ்லிம் சமூகத்தின்மேல் வித்தியானந்தனுக்கிருந்த மதிப்பை மேலும் எடுத்துக் காட்டுகின்றது.

என் தந்தையின் இலக்கியப் படைப்புகளைப் படித்தபின் அவர்மேல் வித்தியானந்தன் ஒரு தனிமதிப்பையே வைத்திருந்தார் என்பதை அவர் தந்தையின் 'செய்னம்பு நாச்சியார் மான்மியம்' என்ற

அங்கதக் கவிதை நூலுக்கு எழுதிய முன்னுரையிலிருந்து அறிந்து கொண்டேன்.

முஸ்லிம்களின் வீடுகளில் பெண்களின் அந்தப்புரத்துக்குள் ஆண்கள் நுழைவதற்கு, குடும்ப நண்பர்களாயினும்சரி, சற்றுத் தயங்குவர். எனது திருமண விருந்துபசார வேளையில் எனது வீட்டின் அந்தப்புரத்துக்குள் எவ்வித தயக்கமுமின்றி விறுவிறென்று நடந்து சென்று அங்கிருந்த எனது பெண் உறவினர்களிடம் குசலம் விசாரித்த முதல் தமிழ்மகன் வித்தியானந்தனாகத்தான் இருக்க வேண்டும். அந்த அளவுக்குக் கள்ளங்கபடமற்ற பிள்ளையுள்ளம் கொண்ட ஓர் உத்தமன் அவர்.

இறுதியாக ஒரு குறிப்பு. இலங்கைப் பல்கலைக் கழகத்தில் இனவாதம் முற்றிவந்த வேளை அது. யாழ்ப்பாணத்திலே ஒரு பல்கலைக் கழகம் உருவாகுவதன் சாத்தியங்கள் அனுகூலமாயிருந்த போது ஒரு நாள் வீதியிலே என்னைச் சந்தித்து “அமீர்! எங்களை விரட்டியடிக்குமுன் நாங்களே போவது நல்லதல்லவா” என்றார். என்னை அவர் யாழ்ப்பாணத்துக்கு அழைக்கிறார் என்பதை அதிலிருந்து அறிந்துகொண்டேன். அவரின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வதற்கு முன்னர் ஏற்பட்ட நிகழ்வுகள் என்னை நாட்டையேவிட்டு வெளியேற வைத்தன. அவுஸ்திரேலியா சென்றபின்பு வித்தியை நான் சந்திக்கவே இல்லை. அவரின் காதல் மனைவி இறந்தபோது நான் அவருக்குக் கடைசியாக எழுதிய அனுதாபக் கடிதத்தில், “நமக்குமது வழியே நாம்போமளவும் எமக்கென்னென் றிட்டுண்டிரும்” என்ற ஒரு பண்டையச் செய்யுளின் இறுதி ஈரடிகளை ஞாபகமூட்டினேன். ஆனாலும், அன்றில்

பறவையைப்போன்று தனது துணைவியை இழந்து நீண்ட நாட்கள் அவரால் வாழ முடியவில்லை. கடைசியாக, வித்தியின் மரணச் செய்தி என்னை எட்டியபோது ஒரு சிறந்த தமிழ் ஆசானை, பழகுதற்கினிய ஒரு பண்பாளனை, ஒரு சர்வமதச் சினேகிதனை, ஒரு மனித நேயனை, ஒரு கலாமோகனை இழந்துவிட்டேன் என வருந்தினேன். வித்தியைப்போல் பல மனித இரத்தினங்கள் நம் மத்தியில் தோன்றவேண்டுமெனப் பக்தியுடன் இறைவனைவேண்டி இன்று இந்த மண்டபத்தில் அந்தப் பெருமகனை நினைவுகூர்ந்து செம்மொழியாம் தமிழ்மொழியில் நான் ஆற்றப்போகும் உரையை அவரின் அன்புக்கும், என்னுயிர்த் தமிழுக்கும் வழங்கும் எனது இதய பூர்வமான காணிக்கையாக்குகிறேன்.

கலாநிதி.அமீர் அலி,
பொருளியல் துறை,
மேர்டொக் பல்கலைக்கழகம்,
மேற்கு அவுஸ்ரேலியா.

# நவ-தாராண்மைப் பொருளாதாரங்களும் பொருளியல் சிந்தனையும்

ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் புள்ளிவிபரத் தரவுகளின்படி 1990ஆம் ஆண்டு உலகச் சனத்தொகையில் 154 கோடி மக்கள் தாம் பிறந்த நாட்டைவிட்டும் வேறொரு நாட்டுக்குப் புகலிடம் தேடி விரைந்துள்ளனர். உலகப் புகலிடவாதிகளின் தொகை அடுத்த பத்து ஆண்டுகளில் அதாவது 2000இல் 174 கோடியை எட்டி, மேலும் பதினைந்து ஆண்டுகளில், 2015இல் 244 கோடியை எட்டிற்று. அவர்களுள், 20 கோடியினர் அகதிகளாவர். உலகச் சனத்தொகை 2000க்கும் 2015க்குமிடையில் 2.8 சதவிகிதத்தால் அதிகரிக்க, புகலிடவாதிகளின் தொகை 3.3 சதவிகிதத்தால் அதிகரித்துள்ளது. சர்வதேசரீதியில் புகலிடம் வழங்கும் நாடுகளுள் முதன்மையான பத்து நாடுகள்: சுவிற்சர்லாந்து, கனடா, ஜேர்மனி, ஐக்கிய ராச்சியம், ஜப்பான், சுவீடன், அவுஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், நெதர்லாந்து ஆகியனவாகும். புகலிடம் தேடுனரைத் தோற்றுவிக்கும் முதன்மையான பத்து நாடுகள்: மெக்சிக்கோ, சீனா, இந்தியா, பிலிப்பைன்ஸ், புவேட்டோ றிக்கோ, வியட்னாம், எல் சல்வடோர், கியூபா, தென் கொரியா, டொமினிக்கன் குடியரசு ஆகியன. மேலே குறிப்பிட்ட 20 கோடி அகதிகளுள் அரைவாசிக்கும் அதிகமானோரைத் தோற்றுவிக்கும் மூன்று நாடுகள் ஆப்கானிஸ்தான், சிரியா, சோமாலியா ஆகியவை. இந்த விபரங்களிலிருந்து புகலிடம் தேடுவோரின் தொகை 1990களின் பின் மிக வேகமாக வளர்ந்துள்ளது என்பதும், அந்த வேகம் நவ-தாராண்மைப் பொருளியற் சிந்தனை பூகோளமயமாகி, உலக நாடுகள் அனைத்தையும் (சீனா, ரஷ்யா உட்பட) ஆட்கொள்ளத்

தொடங்கியபின் அதிகரித்துள்ளதென்பதும் புலனாகின்றது. மூன்றாம் உலக நாடுகளிலிருந்து முதலாம் உலக நாடுகளை நோக்கிய இப்புகலிடப் படையெடுப்பை முதலாம் உலக நாடுகள் அன்றிழைத்த பொருளாதார அநீதிகளுக்காக வரலாறு வாங்கும் பழியென்றும் கூறலாம். இந்த வளர்ச்சியை ஏற்படுத்திய பொருளியற் சிந்தனையையும், அச்சிந்தனை உருவாக்கிய பொருளாதார அமைப்பின் பூரண வடிவத்தையும் விளக்குவதே எனது உரையின் முக்கிய நோக்கமாகும்.

தாராண்மைப் பொருளாதாரச் சித்தாந்தம் ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுகளுக்கு முந்தியது. அதன் புதிய அவதாரமோ கடந்த நுற்றாண்டின் இறுதிக் கால்வாசியில் தோன்றியதொன்று. எனவேதான் அதை நான் நவ-தாராண்மைப் பொருளியற் சித்தாந்தம் என அழைக்கிறேன். கடந்த நூற்றாண்டின் எட்டாவது தசாப்தம் உலகப் பொருளாதார வரலாற்றிலே ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அதற்குக் காரணமாய் விளங்கிய நிகழ்வுகளுள் மூன்று தலைமையானவை. ஒன்று, கைத்தொழிற் பொருளாதாரங்களின் ஜீவநாடியாய் விளங்கிய எண்ணெய்க்கும், எண்ணெய்சார்ந்த பொருள்களுக்கும் பன்மடங்காய் விலையேறியமை. இரண்டாவது, சோவியத் பொதுவுடமையின் நிலைகுலைவும் வீழ்ச்சியும், மறைவும் மூன்றாவது, 1980களிலேற்பட்ட புரட்சிகரமான தொழில்நுட்ப மாற்றங்கள். முதலாவதால் விளைந்த செலவுசார் பணவீக்கமும், தொழிற்குறைவும், அதனாலுண்டான பொருளாதாரத் தேக்கமும் அன்றுவரை புகழ்பூத்திருந்த கீன்ஸியப் பொருளியலை வலுவிளக்கச் செய்தன. இரண்டாவது நிகழ்வு, ஐம்பதாண்டுகளுக்கும் மேலாக அமெரிக்க வல்லரசின்

தலைமையின்கீழ் இயங்கிய முதலாளித்துவப் பொருளாதார அமைப்புக்கும் சோவியத் வல்லரசின் தலைமையிலியங்கிய பொதுவுடமைப் பொருளாதார அமைப்புக்குமிடையிலான பனிப்போரிலே முதலாளித்துவ அமைப்பின் வெற்றியை உறுதிப்படுத்திற்று. மூன்றாவது நிகழ்வு இந்த முதலாளித்துவ அமைப்பு ஒரு புதிய வடிவிலே பூகோளமயமாகுவதற்கு வழிவகுத்தது. இம்மூன்று நிகழ்வுகளைப் பற்றியும் சற்று ஆழமாக விளங்குவது அவசியமாகும்.

ஜோன் மேனாட் கீன்ஸ் எனும் பிரித்தானியப் பொருளியற் சிந்தனையாளரின் பெயரைக்கொண்டு அழைக்கப்படும் கீன்ஸியப் பொருளியல், 1930களின் பொருளாதார மந்தச்சூழலில் அந்தச் சூழலைப் போக்கி, அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் மீண்டும் பொருளாதார வளர்ச்சி காண்பதற்காகத் தோன்றியதொன்று. அது ஒரு புரட்சிகரமான சிந்தனை. தனது சிந்தனை ஒரு புரட்சியை ஏற்படுத்தும் என்பதை கீன்ஸ் அவர்களே ஜோர்ஜ் பேர்னாட்ஷாவுக்கு எழுதிய ஒரு மடலில் தீர்க்கதரிசனமாகக் கூறியிருந்தார். பொருளாதார மந்தத்தைப் போக்குவதற்கு கீன்ஸ் பொருளியல் கற்பித்த பொருளாதார நிவாரணி அரசாங்கத்தின் புதிய பொருளாதாரப்பணி. அதாவது, மந்தநிலைக்கு முக்கிய காரணம் நுகர்வோரின் வருமானக் குறைவாலேற்பட்ட கிராக்கிச் சுருக்கம் என்பது கீன்சின் ஆராய்ச்சி முடிவு. நுகர்வோரிடம் பொருள்களுக்குக் கிராக்கி இல்லையென்றால் எந்த உற்பத்தியாளன் என்ன பொருளை உற்பத்திசெய்து யாருக்கு விற்று இலாபமீட்டுவான்? அவன் உற்பத்தி செய்யவில்லையென்றால் எந்தத் தொழிலாளி எங்கேபோய் வேலை தேடுவான்? முதலுள்ளவர்கள்கூட தமது முதலை யாருக்காக எதை

நாடி எங்கே முடக்குவர்? தன் வீட்டுத் தேவைக்குமேலாக எந்த விவசாயி தனது நிலத்தை உழுது உற்பத்தி செய்யப்போகிறான்? ஆகவே, மொத்தக் கேள்வி வீழ்ச்சியினால் உருவான பொருளாதார மந்தத்தைப் போக்கவேண்டுமென்றால் யாரிடமிருந்தாவது புதிதாகக் கிராக்கி (கேள்வி) பிறக்கவேண்டும்.

அதம் ஸ்மித்துடைய காலத்திலிருந்து, அதாவது பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து கீன்ஸ் காலம்வரை அரசாங்கங்களின் முக்கிய பணி சட்டத்தையும், நீதியையும் நிலைநாட்டி, நாட்டையும் அந்நியரின் படையெடுப்பிலிருந்து பாதுகாத்து, மக்களின் உடமைகளுக்கும் பாதுகாப்பளித்து, சந்தைச் சக்திகள் தடைகளின்றி போட்டியின் அடிப்படையில் இயங்குவதற்கு வழிவகை செய்வதுமாகவே கருதப்பட்டது. ஆனால் அரசாங்கமே ஓர் உற்பத்தியாளனாகவும், வருமானப் பங்கீட்டாளனாகவும் செயற்படவேண்டுமென்பதை எந்தப் பொருளியலாளனும் அன்றுவரை கற்பனை செய்துகூடப் பார்க்கவில்லை. அந்தப்பணிக்கு முக்கியத்துவம் கொடுத்ததுதான் கீன்ஸ் பொருளியல் செய்த புரட்சி. அரசாங்கங்கள் உற்பத்தியாளர்களாக மாறுமானால், அதாவது பொதுத்துறை தனியார்துறைக்கு ஈடாகச் செயற்படுமாயின், தனியார்துறையில் ஏற்படும் கிராக்கிச் சுருக்கத்தை பொதுத்துறையால் நிரப்பமுடியும் என்பதே கீன்ஸியப் பொருளியலின் பிரதான வாதமாகும். அன்றைய அமெரிக்க ஜனாதிபதி பிராங்கிளின் ரூஸ்வேல்ட் அமுல்படுத்திய "புதிய உடன்பாடு" கீன்ஸ் சிந்தனையின் ஒரு வகைச் செயல் வடிவமேயாகும்.

இரண்டாவது உலகப்போர், அமெரிக்கா தவிர்ந்த ஏனைய வளர்ச்சியடைந்த நாடுகளில் ஏற்படுத்திய சீரழிவுகளால், 1930களில் ஏற்பட்ட பொருளாதார மந்தத்தைப்போன்று மீண்டுமொரு தேக்கநிலை உலகெலாம் உருவாகும் அபாயத்தைத் தோற்றுவித்தது. அந்த ஆபத்தைத் தடுத்து நிறுத்திப் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தியது கீன்ஸின் பரிகாரம். இதனால் 1950களிலிருந்து 1970களின் இறுதிப்பகுதிவரை பொதுவாக எல்லாப் பொருளாதாரங்களும், குறைவு விருத்தி நாடுகள் உட்பட, துரிதமான வளர்ச்சியைக் கண்டன. கைத்தொழில் வளர்ச்சிபெற்ற நாடுகளில் தொழிற்படையின் வேலையற்றோரின் தொகை மூன்று அல்லது மூன்றரை சதவிகிதத்துக்குமேல் உயரவில்லை. தொழிற் சங்கங்களின் பலமும், நலன்புரி அரசமைப்பும், பொதுவுடமை அல்லது சமவுடமைத் தத்துவங்கள் ரஷ்யாவிலும் சீனாவிலும் பரவியதுபோன்று தமது நாடுகளிலும் பரவலாமென்ற பயமும் முதலாளித்துவப் பொருளாதாரங்களைப் பொதுமக்களின் நலனிற் கவனஞ் செலுத்துமாறு தூண்டின. கீன்ஸின் ஆலோசனையுடன் அமைக்கப்பட்ட சர்வதேச நாணய நிதியம் அதன் அங்கத்துவ நாடுகளின் தற்காலிகமான சென்மதிநிலுவைப் பிரச்சினைகளைக் கண்காணிக்க, உலக வங்கியென்று இப்போது அழைக்கப்படும் அன்றைய சர்வதேசப் பொருளாதாரப் புனருத்தாரண அபிவிருத்தி வங்கி அதன் அங்கத்துவ நாடுகளின் நீண்டகால நிதித்தேவைகளைக் கவனிக்க, அன்னியச்செலாவணித் தளம்பல்கள் நிலையான நாணயமாற்று விகிதத்தால் குறிப்பிட்ட ஓர் எல்லைக்குள் கட்டுப்படுத்தப்பட, இன்றைய உலக வர்த்தக ஸ்தாபனத்தின் தாய் நிறுவனமான ஐக்கிய நாட்டுச்சபையின் வர்த்தக அபிவிருத்தி மகாநாடு தடையற்ற சர்வதேச வர்த்தகத்தை ஊக்குவிக்க,

நிறைவிருத்தி நாடுகளிலும், குறைவிருத்தி நாடுகளிலும் பொருளாதாரங்கள் பொதுவாக நிறைதொழில் மட்டத்தில் இயங்கலாயின எனலாம். இவ்வாறு கூறுவதன்மூலம் நாடுகளுக்கிடையுள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும், தனிப்பட்ட ஒவ்வொரு நாட்டுக்குள்ளேயும் காணப்பட்ட வருமான ஏற்றத்தாழ்வுகளும் முற்றாக நீங்கினவென்று நான் கூறவில்லை. ஆனால் அன்றிருந்த விரிசல்கள் இன்று காணப்படுவதைவிடவும் குறைவாக இருந்ததென்பதை மறுக்கமுடியாது. இதற்குச் சான்றாக ஒன்றைச் சுட்டிக்காட்டலாம். இரண்டாவது உலகப்போருக்குப் பின்னர் எல்லா நாடுகளிலுமே பொருளாதாரமட்டத்தில் வருமான அளவை மையமாகவைத்து மக்களை மேல்வர்க்கம், கீழ்வர்க்கம், மத்தியவர்க்கமென ஆய்வாளர்கள் பிரித்தனர். 1980கள்வரை மத்தியவர்க்கத்தினரின் விகிதாசாரம் பல நாடுகளிலும் உயர்வடைந்ததையும் அவர்களின் ஆய்வுகள் தெளிவு படுத்துகின்றன. ஆனால் இன்று வேகமாக வளர்ச்சிகாணும் பொருளாதாரங்களில் அந்த மத்திய வர்க்கம் எங்கே என்ற கேள்வியை பல ஆய்வாளர்கள் எழுப்புவதேன்? காரணம் சமூகங்கள் மிதமிஞ்சிய செல்வமுடைய ஒரு வர்க்கமாகவும் ஜீவனோபாய மட்டத்தில் வாழத்தவிக்கின்ற இன்னுமொரு வர்க்கமாகவும் இரண்டாகக் கூறுபடுகின்றன.

கீன்ஸின் பொருளியல் அடிப்படையில் இயந்திரமயமான கைத்தொழில் நாடுகள் ஏறக்குறைய நிறைதொழில் மட்டத்தில் இயங்கிக்கொண்டிருந்த வேளையிலேதான், எண்ணெய் விலையேற்றம் ஒரு பெருந்தலையிடியைக் கொடுத்தது. எண்ணெய் விலை உயர்ந்ததால் உற்பத்திச் செலவு பெருகியது. செலவு

பெருகியதும் உற்பத்தியாளர்கள் விற்பனை விலையை அதிகரித்தனர். விலை உயரக் கிராக்கி (கேள்வி) குறைந்தது. கிராக்கி குறைந்ததால் விற்பனை குறைந்தது. இந்த நிலையில் உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தியின் அளவைக் குறைத்துத் தமது இலாபத்தைக் காப்பாற்றத் தொழிலாளர்களின் வேதனங்களைக் குறைத்திருக்கலாம். ஆனால் அவர்களால் முடியவில்லை. காரணம் அவ்வேதனங்கள், தொழிற் சங்கங்களோடு செய்துகொண்ட ஒப்பந்தங்களால் தீர்மானிக்கப்பட்டவை. அவ்வொப்பந்தங்களை மீறினால் தொழிலாளிகள் ஆர்ப்பாட்டத்தில் இறங்குவரென்ற பயமும் அது ஈற்றில் நீதிமன்றம்வரை சென்று தமக்குப் பாதகமாக முடியலாமென்ற பயமும் ஒருங்கே அவர்களிடம் குடிகொண்டிருந்தது. ஆகவே உற்பத்தியாளர்களுக்குக் கிடைத்த ஒரேயொரு வழி தொழிலாளிகளின் தொகையைக் குறைத்து உற்பத்தியையும் குறைப்பதாகும். இதன் ஒட்டுமொத்த விளைவென்னவெனில் ஒரு பக்கம் விலை அதிகரிக்க மறுபக்கம் தொழிலற்றோர் படையும் பெருகி, உற்பத்தியும் குறைந்து மீண்டும் ஒரு பொருளாதாரத் தேக்கத்தை கைத்தொழில் நாடுகள் எதிர்நோக்கின. இவ்வாறான ஒரு சூழலில் கீன்ஸின் பரிகாரத்தைக் கொண்டு மொத்தக்கிராக்கியை (மொத்தக்கேள்வி) அரசின் செலவினங்களால் அதிகரிக்கச் செய்தால் அது விலையைத்தான் மேலும் உயர்த்துமேயொழிய உற்பத்தியைப் பெருக்காது. காரணம் கைத்தொழிற் பொருளாதாரங்கள் ஏற்கனவே நிறைதொழில் மட்டத்தில் இயங்கிக் கொண்டிருந்தன. சுருங்கச் சொன்னால் பணவீக்கமும் தொழிற்குறைவும் ஒரே சமயத்தில் ஏற்பட்டதால் கீன்ஸியப் பரிகாரம் செயலிழந்து கீன்ஸியப் பொருளியலும் தனது செல்வாக்கை இழக்கலாயிற்று.

இந்த நெருக்கடியான பொருளாதாரச் சூழலிலேதான் இரண்டாவது நிகழ்வான சோவியத் அமைப்பின் சீர்குலைவு முதலாளித்துவ நாடுகளுக்கு ஒரு வரப்பிரசாதமாகக் கிடைத்தது. சோவியத் பொதுவுடமை அமைப்பின் மறைவு 1991 மார்கழி 26இல் நிகழ்ந்தாலும் அதனுடைய பொருளாதார நலிவு 1980களிலேயே ஆரம்பமாகிவிட்டதெனலாம். சில பொருளியலாளர் அதற்கு முன்னரே ஆரம்பித்துவிட்டதெனக் கூறுவர். 1950, 1960, 1970களில் பனிப்போர் முற்றியிருந்த வேளையில், தாராண்மை அரசியற்சிந்தனையின் பொருளாதாரக் கரமாக விளங்கிய முதலாளித்துவ அமைப்புக்கு எதிரான, ஏற்றத்தாழ்வற்ற, ஒரு பொருளாதார சமுதாயத்தைப் பொதுவுடமைவாயிலாகவோ அதன் சகோதரச்சித்தாந்தமான சமவுடமைவாயிலாகவோ கட்டியெழுப் பலாம் என்ற நம்பிக்கை அமெரிக்கா உட்பட எல்லா நாடுகளிலும் பல அரசியற் கட்சிகளின் கொள்கைப் பிரகடனத்தில் ஒரு முக்கிய அம்சமாக மிளிர்ந்திருந்தது. அக்கட்சிகளுக்கு ஆதரவாக சோவியத் வல்லரசும் விளங்கியது. இந்த மாற்றுச் சித்தாந்தங்களின் பிரதிபலிப்பாகவே முதலாளித்துவ அரசுகள் நலன்புரி அரசுகளாக மாறி 1980வரை செயற்பட்டன. இந்த நலன்புரி அரசமைப்பைச் செல்வந்தர்களோ, முதலாளிகளோ, முனைவர்களோ ஆதரிக்க வில்லை. ஏனெனில் மக்கள் நலனுக்கான அரசுகள் அவற்றின் செலவுக்கான நிதி வருவாயைக் கணிசமான அளவு வருமான வரி, நிறுவன வரி போன்ற நேர்வரிகள்மூலம் சேகரித்ததால் அவ்வரிகள் செல்வந்தர்களையும் அவர்தம் நிறுவனங்களையும் பாதித்தன. ஆனால் அவ்வரிகளைக் குறைத்து நேரில் வரிகளை உயர்த்திப் பொதுநலத் தேவைகளான கல்வி, மருத்துவம், உணவு மானியங்கள் போன்ற செலவினங்களையும் கட்டுப்படுத்துவதற்கு உள்நாட்டிலே

பலமான எதிர்ப்பும் அதற்கு ஆதரவாக சோவியத் வல்லரசு செயற்பட்டதும் தடைகளாயிருந்தன. இப்போது, சோவியத் வல்லரசின் சீர்குலைவு உள்நாட்டு எதிர்ப்புச் சக்திகளை முறியடிப்பதற்கு ஒரு சிறந்த வாய்ப்பை முதலாளித்துவ தாராண்மை அரசுகளுக்கு வழங்கிற்று.

இதே வாய்ப்பைத்தான் மூன்றாவது நிகழ்வான புரட்சிகரத் தொழில்நுட்ப மாற்றங்களும் வழங்கலாயின. இந்த மாற்றங்கள் இதுவரை மனித வரலாற்றில் ஏற்பட்ட தொழில்நுட்ப மாற்றங்களைவிடவும் தரத்தினால் வேறுபட்டவை. கணினி, மடிக்கணினி, இணையம், வலையமைப்பு, தகவல் தொழில்நுட்பம், ரோபோ, தொலைநகல், கையடக்கத் தொலைபேசி என்றவாறு 1980களிலிருந்து ஒன்றன்பின் ஒன்றாகவும், விரைவாகவும் அறிமுகமாகிய எத்தனையோ புதிய கண்டுபிடிப்புகள் இரண்டு வழிகளிற் புரட்சிகரமானவை. ஒன்று, இதுவரை காலமும் ஏற்பட்ட தொழில் நுட்ப மாற்றங்கள் மனித தசைப்பலத்துக்கு ஈடாகச் செயற்பட்டன. ஆனால் 1980களைத் தொடர்ந்து ஏற்பட்டுவரும் தொழிநுட்ப மாற்றங்கள் மனித மூளைக்கே ஒரு சவாலாக அமைந்துள்ளன. இரண்டு, இம்மாற்றங்கள் நேரத்தையும் தூரத்தையும் சுருக்கி உலகையே ஒரு கிராமமாக்கிவிட்டன. முதலாவது புரட்சியினால் மனிதத் தொழில்வாய்ப்பு ஒரு புதிய பாதையில் வளர்ந்தாலும் மொத்த அளவில் அது தொழில் வாய்ப்பினைக் குறைக்கின்றது. தொழில் தேடுவோர் அதிகம், ஆனால் தொழில் வாய்ப்புகளோ குறைவு. இதன் விளைவாகத் தொழிற் சங்கங்களின் பலம் நலிவடையத் தொடங்கிற்று. இரண்டாவது வழியிலான புரட்சி, அதாவது நேரமும் தூரமும்

சுருங்கியதால் கைத்தொழில் நாடுகளின் உற்பத்தியாளர்களுக்குத் தமது சொந்த நாட்டிலேதான் தொழிற்சாலைகளை அமைத்துத் தமது சொந்தக் கண்காணிப்பின்கீழ் அவை இயங்கவேண்டுமென்ற தேவை முற்றாக நீங்கியமையாகும். எங்கே செலவு குறைவோ அங்கே உற்பத்திசெய்து, அதை யாரையோ கொண்டு கண்காணிக்கவைத்து, அதேசமயம் அவ்வாறு கண்காணிப்பவர்களைத் தமது தாயக அலுவலகத்திலிருந்தவாறே நோட்டமிட்டு அவ்வாறு உற்பத்தி செய்தனவற்றை எங்கே கூடிய விலைக்கு விற்கமுடியுமோ அங்கே விரைவில் கொண்டுபோய் விற்று இலாபமீட்டக்கூடிய ஓர் அரிய வாய்ப்பை இத்தொழில்நுட்ப மாற்றங்கள் ஏற்படுத்திக் கொடுத்தன. எண்ணெய் விலையேற்றத்தாலும், தொழிற் சங்கங்களின் கறாரான நிபந்தனைகளாலும் இலாபம் பெருக்கமுடியாமல் தத்தளித்த கைத்தொழில் நாடுகளின் தொழில் முனைவர்களுக்கும் முதலாளிகளுக்கும் இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் காற்பகுதியிலேற்பட்ட தொழில்நுட்பப்புரட்சி பூகோளத்தையே ஒரு சந்தையாக்கிக் கொடுத்து, தொழிலாளிகளின் போராட்டத்தையும் வலுவிழக்கச் செய்தது. இதுதான் பூகோளமயவாக்கத்தின் அந்தரங்கப் பொருளாதாரப் புரட்சி.

(இந்தச் சந்தர்ப்பத்தில் அமரர் வித்தியானந்தனின் நினைவாக ஓர் உண்மையைக் கூற விரும்புகிறேன். முதன் முதலில் உலகத்தைக் கிராமமாக இல்லாமல் அதற்கும் ஒரு படி மேலேறி அதனை ஒரு குடும்பமாகக் கருதியவன் தமிழன். பண்டைய இலக்கியமாம் புறநானூற்றிலே கணியன் பூங்குன்றனாரின் "யாதுமூரே யாவருங் கேளிர்" என்ற நான்கு வார்த்தைகளுக்குள் இந்த அழகிய தத்துவம் பொதிந்துள்ளதை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.)

உலகெலாம் சுற்றித்திரிந்து இலாபம் திரட்டும் வாய்ப்பை முதலுக்கு அமைத்துக்கொடுத்தது இன்றையப் பூகோளமயவாக்கம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் கார்ள் மாக்ஸ் சொன்ன தீர்க்கதரிசனம் இன்று நனவாகியுள்ளது. இந்தப் புரட்சி வெற்றிபெற அதற்குக் கிடைத்த ஓர் எதிர்பாரா நன்கொடை பொதுவுடமைச் சீனா 1976க்குப்பின்னர் சந்தைப் பொருளாதார முதலாளித்துவத்தைத் தனக்கேயுரிய சீனமுகத்துடன் தழுவியமையாகும்.

எண்ணெய் விலையேற்றம் தோற்றுவித்த தேக்கவீக்க நெருக்கடி, சோவியத் அமைப்பின் சீர்குலைவு, தொழில்நுட்பப் புரட்சி ஆகிய மூன்றும் உருவாக்கிய புதிய சூழலில் கீன்ஸியப் பரிகாரம் செயலிழந்து நிற்க, பொருளியற் சிந்தனை மீண்டும் சந்தைச் சக்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பொருளாதாரத்துறையில் அரசின் தலையீட்டினைக் குறைக்க வேண்டுமென வாதாடியது. இந்த வாதத்தின் பிரதான கதாநாயகனாக விளங்கியவர் சிக்காகோ பல்கலைக்கழகப் பொருளியற் பேராசிரியர் மில்டன் பிரீட்மென் ஆவர். 1970களுக்கு முன்னர் எவ்வாறு கீன்ஸ் முதலாளித்துவப் பொருளியற் சிந்தனையின் கதாநாயனாகப் போற்றப்பட்டாரோ அதைவிடவும் மேலாக பிரீட்மென் அதற்குப்பிறகு புகழடைந்தார். அவருடைய சிந்தனையை அமுல்படுத்த முன்வந்த அரசியல் தலைவர்களுள் அமெரிக்க ஜனாதிபதி றொனால்டு றேகனும் பிரித்தானியப் பிரதமர் மாகிரட் தச்சரும் முக்கியமானவர்கள். இவர்களிருவரையும் நவ-தாராண்மைப் பொருளியலின் அவதார தம்பதிகளெனக் கூறுவேன். தனியார் முயற்சிக்குப் பூரண சுதந்திரம் வழங்கி, தொழிற்

சங்கங்களைப் பலமிழக்கச் செய்து, சந்தைச் சக்திகளின் விலைப்பொறிமுறை இயங்குவதற்குத் தடையாய் நின்ற அரசாங்கக் கட்டுப்பாடுகளையும், வரிமுறைகளையும் தகர்த்தெறிந்து, தனியார் நிறுவனங்களின் வரிப்பழுவைக் குறைத்து, குறைவிருத்தி நாடுகளுக்குத் தேவை இதுவரை கருதியதுபோன்று அன்னியரின் சலுகைநிறைந்த நிதியுதவியல்ல, மாறாக அந்நியர்களுடனான தடையற்ற வர்த்தகமும் அவர்களின் முதலீட்டுக்கான சுதந்திரமும் என்ற சிந்தனையைச் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, உலக வர்த்தக நிறுவனம் ஆகியவற்றினூடாகப் பரப்பி, முதலாளித்தவப் பொருளாதார வளர்ச்சிக்குக் கடுகதி வேகத்தையளித்த நவயுக அரசியற் பிரமாக்கள் இவ்விரு தலைவர்களுமாவர்.

கீன்ஸியப் பொருளியலில் பொதுத்துறைக்குப் பிரதான பங்குண்டென்பதை ஏற்கனவே கூறினேன். ஆனால் இப்போது நவ-தாராண்மைப் பொருளியலின் தத்துவத்தில் அந்தத்துறையின் பொருளாதாரப்பணி படிப்படியாகக் குறைக்கப்பட்டு ஆதார அமைப்புகளை வழங்குதலோடு நிறுத்தப்பட்டுள்ளது. அதைத்தவிர மற்றும் கல்விவழங்கல், வைத்திய, சுகாதார தேவைகளில் முதலீடு செய்தல், பொதுப்பயன்பாட்டுத் துறைகளைக் கட்டியெழுப்பிக் கண்காணித்தல் போன்ற இன்னோரன்ன பொருளாதார அலுவல்களையெல்லாம் தனியார் துறைக்கே விடவேண்டுமென்பது இப்பொருளியலின் தாரகமந்திரம். இவ்வாறு தனியார் துறைக்கு இத்துறைகளைச் சாட்டுவதனால் அரசாங்கத்தின் நிதித் தேவைகள் குறையும், அவை குறைந்தால் நேர் வரிகளைச் செல்வந்தர்கள்மீதும், அவர்கள் நடத்தும் உற்பத்தி, வர்த்தக நிறுவனங்கள்மீதும் சுமத்தவேண்டிய அவசியமிருக்காது. அரசாங்கத்தின் அன்றாட

நிர்வாகத் தேவைகளுக்கான நிதியை நேரில் வரிகள்மூலம் அறவிடலாம். அந்தச் சொற்ப வருமானத்துடன் அரசாங்கத்தின் நிதிநிலையைச் சமப்படுத்தலாம். எனவே பற்றாக்குறையான வரவுசெலவுத் திட்டங்களை அமைக்கவேண்டிய அவசியமே இருக்காது. இவைதான் நவ-தாராண்மைப் பொருளியலின் அழுத்தமான வாதம்.

கீன்ஸின் சிந்தனையில் அரசாங்கம் அறவிடும் நேர்வரிகள் வருமானத்திற்கேற்ப நகர்வதால் அவை அரசாங்கத்துக்கு வருமானத்தைத் தேடிக்கொடுப்பது ஒரு புறமிருக்க, சமுதாயத்தின் வருமானப்பங்கீட்டுப் பணியையும் அத்துடன் ஆற்றியது. சமூகத்தின் வருமான ஏற்றத் தாழ்வுகளை அவை ஓரளவுக்காவது கட்டுப்படுத்தின. தாராண்மைப் பொருளியற் சிந்தனையில் பங்கீட்டுப்பணிக்கு அரசாங்கத்தில் இடமில்லை. செல்வந்தர்களையும் முனைவர்களையும் சுதந்திரமாக இயங்கவிட்டால் அவர்கள் தம் மூலதனத்தையும் முயற்சியையும் உற்பத்தியில் முடக்குவர். அது தொழில் வாய்ப்பினைப் பெருக்கும். தொழில் வாய்ப்புப் பெருகினால் தொழிலாளிகளின் உழைப்பு அதிகரித்து உழைப்புக்கேற்ற வேதனத்தையும் பெறுவர். இதைவிட வேறென்ன பங்கீடு வேண்டும்? இதற்கும் அப்பால் சிலர் வறுமையால் வாடினால் அவர்கள்ளத் தனியாரது தர்ம நிறுவனங்களும் தர்ம நிதியும் கவனித்துக்கொள்ளும். இதை வேறுவிதமாகக் கூறினால் பொருளாதார அமைப்பு வறுமையைப் பெருக்க செல்வந்தர்களின் தயாளம் அதைப் போக்கும் என்பதாகும். முதலின் தயவிலே வாழும் தொழிலின் நிலைபற்றி ஜோன் கெனெத் கல்பிறைத் என்ற பொருளியலாளர் அவரது வழமையான அங்கதப்பாணியில்

பின்வருமாறு கூறினார் "குதிரைக்குக் கொள்ளைக் கொடுத்தால் அதைச் சாப்பிட்டபின் அதன் பின் துவாரத்தால் ஏதோ ஒன்றைத் தள்ளும். அதுதான் ஊர்க்குருவியின் உணவாகும்." இவ்வாறுதான் நவ-தாராண்மைப் பொருளாதாரங்களும் செயற்படும் என்பதை நாசுக்காக அவர் விளக்கினார்.

பிரீட்மெனின் தாராண்மைப் பொருளியலில் அரசாங்கத்தின் இன்னுமொரு பொருளாதாரப்பணி மத்திய வங்கியின் மூலம் பணப் புழக்கத்தைப் பணவீக்கம் ஏற்படாவண்ணம் கண்காணித்தலாகும். பணத்தின் பெறுமதியைக் காப்பாற்றித் தனியார் துறைக்குப் பூரண சுதந்திரம் அளித்துப் பொருளாதாரத்தை வளரவிட்டால் அது தன்னால் வழங்கக்கூடிய தொழில் வாய்ப்பைத் தொழிலாளரின் உழைப்புக்குத் தகுந்த வேதனத்துடன் எந்தத் தொழிற் சங்கத்தினதும் வற்புறுத்தலோ, குறைந்த வேதனச் சட்டங்களின் நிபந்தனைகளோ இன்றி வழங்கும். தனியார் துறை கொடுக்கும் வேதனத்துக்கு வேலை செய்ய விரும்பாதவர்கள் சுத்தச் சோம்பேறிகளாக இருப்பதனால் அவர்களை வலிந்து வேலைக்கிழுக்க முடியாது என்பது இந்தச் சிந்தனையின் ஏகோபித்த முடிவு. இத்தத்துவத்தின்படி நிறைதொழில் காணவேண்டுமென்றும் அதற்காகத் தனியான ஒரு கொள்கையைக் கீன்ஸ் சொன்னதுபோன்று அரசாங்கம் இயற்ற வேண்டுமென்பதும் அரசாங்கத்துக்கு அனாவசியமான தொழிற்பாடுகள்.

இவ்வாறான பணக்கொள்கையை மையமாகக் கொண்டெழுந்த தாராண்மைப் பொருளியற் சிந்தனையின் அத்திவாரத்திற் கட்டப்பட்டவையே இன்று உலகெங்கும் இயங்கும் தலைமைப் பொருளாதாரங்கள். ஐக்கிய சோவியத் சமவுடமைக்

குடியரசுகள் கலைந்தபின்பு உருவாகிய ரஷ்யக் கூட்டமைப்பும் பிரீட்மெனின் சிந்தனைச் செல்வாக்கினால் அதே அத்திவாரத்திற் தனது பொருளாதாரத்தை மாற்றிக்கொண்டது. (சிக்காக்கோ பொருளியலாளர்கள் ரஷ்யாவுக்குச் சென்று கோபச்சோவுக்கு ஆலோசனை வழங்கியது இந்த மாற்றத்துக்காகத்தான்.) அதே பாதையில் சில மாற்றங்களுடன் மாவோவின் மரணத்துக்குப்பின் தங் சியோ பெங் தலைமையிலான சீனாவும் தனது பொருளாதாரத்தைச் சீரமைத்தது. இவ்விரண்டு மாற்றங்களும் தாராண்மைவாதிகளுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி. இந்த வெற்றியின் மமதையில் எழுதப்பட்டதுதான் பிரான்சிஸ் புகயாமாவின் 1992இல் ஆங்கிலத்தில் வெளிவந்த "வரலாற்றின் முடிவும் இறுதி மனிதனும்" என்ற நவ-தாராண்மைப் பிரச்சார நூல். அதைத் தொடர்ந்து இன்னும் பலர் அதே தொனியில் இப்பொருளாதார அமைப்பின் புகழ் பாடினர். உண்மையிலேயே இதன் பூரண வடிவமென்ன?

நவ-தாராண்மைப் பொருளியல் முதலுக்கும், சந்தைச் சக்திகளுக்கும் முதலிடம் வழங்கிப் பொருளாதார அலுவல்களில் அரசாங்கங்களின் தலையீடு பொருளாதார வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிக்கும் என்ற மந்திரத்தைப் போதிக்க, தொழில்நுட்பப் புரட்சிதோற்றுவித்த பூகோளமயவாக்கம் சந்தைகளை நெருக்கமாக்கி முதலீட்டாளர்களுக்கும் அவர்தம் முதலுக்கும், முனைவர்களுக்கும் உலகெலாம் சுற்றி வலம்வந்து எங்கே இலாபத்தை உச்சப்படுத்தலாமோ எங்கே உற்பத்திச் செலவினங்களை அடிமட்டத்துக்குக் கொண்டுவரலாமோ அங்கே தமது தொழிற்சாலைகளையும் நிறுவனங்களையும் நிறுவக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. இந்த வாய்ப்பு தொழிலுக்குக்

கிடைக்கவில்லை. முதலுக்குக் கிடைத்த வாய்ப்புக்கு இன்னுமொரு காரணம் உண்டு. அதுவும் எண்ணெய் விலையேற்றத்தால் விளைந்த ஒன்று.

எண்ணெய் விலையேற்றம் கைத்தொழில் நாடுகளுக்குப் பணவீக்கத்தையும் தொழிற் சுருக்கத்தையும் கொடுத்த அதேவேளை எண்ணெய் உற்பத்திநாடுகளுக்கு அந்நாடுகளால் எண்ணிக்கூடப் பார்க்கமுடியாதளவுக்குப் பணத்தைக் கொண்டு குவித்தது. எண்ணெய் உற்பத்திநாடுகளின், குறிப்பாக அரபு நாடுகளின், நவீனமயவாக்கம் இங்கிருந்தே ஆரம்பித்தது. அந்த நாட்களில் 'பொருளியலாளன்' என்ற ஆங்கிலச் சஞ்சிகை எழுதிய ஒரு கட்டுரையில் சவூதி அரேபியா தனது மணற்பூமியைப் பொன்னால் மூடினாலும் தனது பணத்தைப் பூரணமாகச் செலவுசெய்ய முடியாதெனக் குறிப்பிட்டிருந்தது. இந்த நாடுகளின் செலவுக்கும் மிகையான பணம் அமெரிக்க, ஐரோப்பிய வங்கிகளின் வைப்புத் தொகையாக மாறியது. இதனால் அந்த வங்கிகளின் பணச்சொத்து மிதமிஞ்சி அதிகரித்து வட்டிவீதம் குறைந்து அப்பணத்தை யாருக்காவது கடனாகக்கொடுத்து இலாபம்பெற முடியாதா எனத் திண்டாடின. அவ்வங்கிகளின் திண்டாட்டத்தைப் போக்க முன்வந்தன அன்றைய மூன்றாம் உலக நாடுகள். எண்ணெயுற்பத்தி செய்யாத குறைவு விருத்தி நாடுகள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அந்த வங்கிகளிடமிருந்து இலகுவாகக் கடன் வாங்கத் தொடங்கின. இந்தக் கடனால் அந்நாடுகளின் பொருளாதாரங்கள் என்ன நன்மையடைந்தன என்ற கேள்வி ஒருபுறமிருக்க, அக்கடனால் மேற்கின் வங்கிகள் அமோக லாபம் திரட்டின என்பதை மறுக்கமுடியாது. 1980களின் பிற்பகுதியில் வட்டிவீதம் அதிகரிக்கத்

தொடங்கவே கடன்பட்ட நாடுகளின் வட்டிச்சுமை விஷம்போல் ஏறி அவற்றின் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கலாயிற்று. இந்த நிலையில் அந்த நாடுகளுக்குக் கிடைத்த ஒரே வழி வெளிநாட்டு முதலீட்டுக்கு மிகக்குறைவான நிபந்தனைகளுடன் தமது கதவுகளைத் திறந்துவிடுவதே. மேற்கு வல்லரசுகளின் அரசியற் குடியேற்றத்திலிருந்து விடுதலையடைந்த நாடுகள் இப்போது அதே வல்லரசுகளின் முதலீடுகள்மூலம் பொருளாதாரக் குடியேற்றமொன்றுக்கு அடிமையாகத் தொடங்கின. நவ-தாராண்மைப் பொருளியலும் பூகோளமயவாக்கமும் வறுமை நாடுகளுக்குச் செய்த ஒரு மகத்தான கைங்கரியம் இது.

அரசாங்கங்கள் பட்ட கடன் ஒரு புறமிருக்க மக்களும் தனிப்பட்டமுறையில் வங்கிகளின் கடனாளிகளானார்கள். இது ஒரு சுவையான கதை. பூகோளமயவாக்கத்தினால் பொருளாதாரங்கள் நெருக்கமுற்று, தனியார் முதலீடுகள் திரளாய்ச் சேர்ந்து கட்டியமைத்த பன்னாட்டு வியாபார நிறுவனங்கள் தமது பளிங்குமாளிகைக் கடைகளை உலகின் பலபாகங்களிலும் திறந்தமையால் அக்கடைகளின் கண்ணாடிக் கூண்டுகளுக்குள் கவர்ச்சியாய் வைக்கப்பட்ட சிலைகளும், அச்சிலைகளை அலங்கரித்த துணிமணிகளும், நகைநட்டுகளும், அவற்றினருகே வைக்கப்பட்டிருந்த வாசனைக் கலசங்களும் வாலிப உள்ளங்களுக்கும், அவ்வுள்ளங்களின் உறவுகளுக்கும் வலைவீசின. அக்கடைகள் நவீன பொருளாதாரங்களின் கோயில்களாகமாற வாலிபப்பக்தர்கள் அவற்றைத் தவறாது தரிசிக்கலாயினர். பணம்படைத்த வாலிபம் கடைகளின் பொருள்களை வாங்கி அக்கோயில்களுக்குத் தமது காணிக்கையைச் செலுத்தினர். அந்த

வாலிபத்தின் பக்தியைக்கண்டு பணமில்லாத வாலிபம் ஏங்கிநின்ற வேளையில் அவர்களையும் பக்தர்களாகமாற்ற வங்கிக் கடவுளர் முன்வந்தனர். பணமற்ற வாலிபத்துக்கு ஓர் அட்டையைக் கையிற் கொடுத்து அதனை இலேசாகப் பணமாக்கும் வகையில் அக்கடைகளின் ஓரத்திலேயே தானாக இயங்கும் வங்கிச் சாவடிகளையும் அமைத்தன. அவ்வாறு கடன்வாங்கிய பணத்தைக்கொண்டு அவர்களும் கடைக் கோயிலுக்குச் சென்று தமது காணிக்கையைச் செலுத்தலாயினர். இவர்கள் வாங்கிய பொருள்களில் அநேகம் உண்மையிலேயே அவர்களுக்கு அவசியமற்றவையென்றாலும் அக்கோயில்களின் விளம்பரப் போதனை அவற்றை அவசியமென வலியுறுத்தி அவர்களை நம்பச் செய்தன. பூகோளமயமாகிய நவ-தாராண்மைப் பொருளா தாரங்களின் விந்தையான விற்பனை இது. இந்த விற்பனை விந்தையின் வினோதத்தை இப்படியுங் கூறலாம்: தனக்கு அவசியமில்லாத ஒன்றைத் தன்னிடமில்லாத பணத்தைக்கொண்டு தான் விரும்பாத ஒருவரைக் கவர்கின்ற ஒரு நுகர்வுக் கலாசாரம் இது. மாத முடிவிலோ, வருட முடிவிலோ வங்கிக் கடவுளரிடமிருந்து ஓலையொன்று வரும். அதிலே கருணையுள்ளம்கொண்ட கடவுளர் முழுக்கடனையும் கட்டும்படி பக்தர்களைக் கேட்கமாட்டார்கள். ஒரு சிறு தொகையை மட்டும் கட்டினால் போதும் மிகுதியைப் பின்னர் கட்டலாம் என்பர். என்னே அவர்கள் கருணை? கட்டாத தொகைக்கு எட்டாத உயரத்துக்கு வட்டியேறும் என்பதைப் பக்தர்கள் உணர்வதில்லை. இவ்வாறு விஷம்போல் ஏறும் கடன்பழு எத்தன்ன குடும்பத் தலைவர்களைத் தற்கொலை முயற்சிக்குத் தள்ளிவிட்டிருக்கின்றது? எத்தனை பரம்பரைச் சொத்துக்களைப் பறிமுதல் செய்துள்ளது? அண்மையில் நான் அக்கரைப்பற்றுக்குச்

சென்றபோது அங்குள்ள எனது நண்பர் ஒருவர் இந்த உண்மையை ஓர் உதாரணத்துடன் சுவைபடப் பின்வருமாறு கூறினார்: "வீதியிலே ஒரு புதிய மோட்டார் வாகனம் போகுதென்றால் அதன் பின்னாலே அந்த வாகன உரிமையாளனின் வீடும் காணியும் சேர்ந்தே போகுமாம்". நவீன பொருளாதாரம் அமைத்த பொறிக்குள் சிக்கியோர் முடிவிது. நாடுகளுக்கும் கடன்சுமை, அந்நாட்டு மக்களுக்கும் கடன்சுமை. தாம்பட்ட கடனுடன் நாடுபட்ட கடனையும் இறுக்கும் பொது மக்களின் பொறுமை எவ்வளவு காலம் நீடிக்குமோ? உலகின் தொண்ணூறு சதவிகிதத்தினர் உலகின் பத்துச் சதவிகித வருமானத்தை அனுபவிக்கப் பத்துச்சதவிகிதத்தினர் மட்டும் எஞ்சிய தொண்ணூறு சதவிகிதத்தையும் அனுபவிக்கின்றனரென்ற ஒரு அதிர்ச்சித் தகவலை நீங்கள் அறிந்திருப்பீர்களென நினைக்கிறேன். 1980களில் 80-20ஆக இருந்த சமன்பாடு இப்போது 90-10ஆக விரிவடைந்துள்ளமையும், இவ்விரிவு 99-01 ஆக நவ-தாராண்மைப் பொருளியலின் தாயகமான அமெரிக்காவில் வளர்ந்துள்ளமையும் இப்பொருளாதார அமைப்பு செய்த இன்னுமொரு விபரீதலீலை என்பதை மறுக்கமுடியுமா?

பணம் ஒரு மாற்றூடகமாக மட்டும் இயங்கியபோது பணமே ஒரு சொத்தாகக் குவியவில்லை. பண்டமாற்றுப் பொருளாதாரத்தின் சிக்கலொன்றை நீக்கவே அது பயன்பட்டது. ஆனால் பொருளாதாரங்கள் வளர்ச்சிபெற்று உற்பத்தியின்மேல் பணத்துக்குள்ள ஆளுமையை மக்கள் உணரத் தொடங்கியதுடன் பணமே ஒரு சொத்தாக மாறிற்று. எனினும், நீண்டகாலமாக உற்பத்திமூலம்தான் முனைவர்கள் அப்பணத்தைச் சம்பாதித்துச் சேமித்து அதனைச் சொத்தாக மாற்ற முடிந்தது. இவ்வாறு உற்பத்தி

இலாபமாகிச் சேமிப்பாகிச் சொத்தாகும் வழி தற்போதைய பொருளாதார அமைப்பிலே புரட்சிகரமான முறையில் மாறியுள்ளமையையும் விளங்கவேண்டும். உற்பத்தியினூடாகப் பணத்தைச் சொத்தாகத் திரட்டும் நிலைமாறிப் பணத்தையே மேலும் பணமாக்கும் ஒரு சூட்சுமத்தை நவீன பொருளாதாரம் கண்டுபிடித்துள்ளது. இதுதான் இன்றைய சர்வதேசப் பணச்சந்தை செய்யும் விந்தை. பொருளுக்குத்தான் சந்தையென்று காலங்காலமாகக் கருதியதுபோய் இப்போது பணத்துக்கே சந்தையொன்று உருவாகியமை ஒரு புரட்சியல்லவா? வங்கிகள்கூட தம்மிடமுள்ள வைப்புகளையும் சொத்துக்களையும் தமது பரம்பரைத் தொழிலான கடன் வழங்குதலில் முடக்குவதைவிடப் பணச் சந்தையில் முடக்கி அதன் சூதாட்டம்போன்ற பங்குச் சந்தைமூலம் இலாபத்தைப் பெருக்க விழைவதால் வங்கிகளே ஸ்திரமற்ற நிலையில் தொழிற்படுகின்றன. 2008இல் அமெரிக்காவில் ஏற்பட்ட நிதி நெருக்கடி உலகத்தையே பாதித்ததற்கு அமெரிக்க வங்கிகளின் கட்டற்ற பணச்சந்தைச் சூதாட்டம் என்பது இப்போது உறுதியாகிவிட்டது. இந்தச் சூதாடிகளைத் தண்டித்து வங்கிகளின் நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்துவதை விடுத்து அவர்களுக்குச் சன்மானம் வழங்கி வங்கிகளைத் தொடர்ந்தும் கட்டுப்பாடற்ற நிலையில் இயங்கவிட்டமை அமெரிக்கத் தாராண்மைவாதிகளின் அதிகாரபலத்தையும் அவர்கள் யாரின் நலனுக்காகச் செயற்படுகிறார்கள் என்பதையும் தெளிவுபடுத்தவில்லையா?

பணச்சந்தையிலே விற்கப்படுவதும் வாங்கப்படுவதும் உண்மையிலேயே பணமல்ல. மாறாக, வெறும் எழுத்துக்களும் வார்த்தைகளும் சைகைகளுமே. பங்குச் சந்தை, பெறுதிச் சந்தை,

என்றெல்லாம் அழைக்கப்படும் இந்நூதனச் சந்தைகளில், கைமாறுவன பொருள்களா பொருள்களைப்பற்றி யார்யாரோ கொண்டுள்ள அபிப்பிராயங்களா? இவ்வாறு எழுத்துக்களும், வார்த்தைகளும், அபிப்பிராயங்களும் பணமாக நடமாடும் இப்பொருளாதார உலகில் மத்திய வங்கிகளின் பிரதான கடமை பணத்தின் தொகையை நிர்ணயிப்பதென்று பொருளியல் மாணவர்களுக்குக் கற்பிப்பதில் ஏதேனும் அர்த்தமுண்டா? பணமென்றாலே என்னவென்று விளங்காத நவ உலகில் அதைக் கட்டுப்படுத்துவதென்பதும் கண்காணிப்பதென்பதும் வெறும் கற்பனையே. இதனாலேதான் மத்திய வங்கிகள் காலத்துக்கொவ்வாத நிறுவனங்களென ஜேக் றஸ்முஸ் எனும் பொருளியலாளர் வருணித்துள்ளார்.

பணச்சந்தையில் திரட்டக்கூடிய வருமானத்தை உற்பத்திமூலம் திரட்டமுடியாதென உணர்ந்த முனைவர்கள், தமது மூலதனத்தைப் பணச்சந்தையில் முடக்குவதால் பொருளாதாரமே இன்று பணாதாரமாக மாறிவிட்டது. ஒரு சிறிய உதாரணத்தைக் கொண்டு இப்பணாதாரத்தை விளக்கலாம். இன்று உலகம் முழுவதும் உற்பத்திசெய்யப்படும் பொருள்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தேவையான பணம் உலகத்திலே புழங்கும் பணத்தொகையில் இருபது சதவிகிதம் மட்டுமே. அப்படியானால் மிகுதி எண்பது சதவிகிதப்பணமும் ஏன் நடமாடுகின்றது? பணத்தையே விற்றுத் பணம் திரட்டுவதற்காகவே. இதைக் 'கொதிப் பணம்' எனச் சிலர் அழைக்கின்றனர். பணச்சந்தை படைத்த பணவுலகம் இது.

இவ்வாறு பொருளாதாரங்களின் நடவடிக்கைகளைவிடவும் பணாதாரங்களின் நடவடிக்கைகள் பெருகியுள்ளமையால் உற்பத்தித்துறை நிறைமட்டத்துக்குக் குறைவாகவே செயற்படுகின்றதெனக் கைத்தொழில் நிலைபற்றிய புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. அதேவேளை, கடன்சுமையாலும், தொழில் வாய்ப்பின்றியும், வருமானக் குறைவாலும் அடிப்படைத் தேவைகளையேனும் பூர்த்திசெய்யமுடியாத நிலையிற் கோடிக்கணக்கானோர் வாழ்வதால் மொத்த நுகர்வும் குறைவதாக அதே விபரங்கள் காட்டுகின்றன. இந்தச் சூழலில் சர்வதேச நிதி நிறுவனமும், உலக வங்கியும், உலகப் பொருளாதார வளர்ச்சி பற்றி ஆண்டுதோறும் வெளியிடுகின்ற புள்ளிவிபரங்களில் எந்த அளவுக்கு அர்த்தமுண்டென்பதை நீங்களே யோசித்து முடிவெடுங்கள்.

பணச்சந்தையிலே திரட்டப்படும் பணமெல்லாம் அரசாங்கங்களின் வருமானவரி வலைக்குட் சிக்காமல் பிரபல கணக்காளர் நிறுவனங்களின் நிபுணத்துவ ஆலோசனையுடன் மர்மமாய்ப் பறந்துபோய் பனாமாவிலும், பஹாமாவிலும் மற்றும் பல கடல்கடந்த, சட்டத்தின் பிடிகளுக்கு அப்பாற்பட்ட நிதி நிலையங்களிலும் அடைக்கலம் புகுந்திருப்பதை எல்லா அரசியற் தலைவர்களும் அறிவர். இருந்தும் அப்பணக் குவியலை மீட்டுவருவதற்கு ஏன் அவர்கள் ஐக்கியமாகச் செயற்படுகிறார் களில்லை என்பது ஒரு புதிராகத் தெரியவில்லையா? அரசுகளின் பலவீனத்தையும், தனவந்தர்களின் உலகளாவிய செல்வாக்கையும் இது தெளிவாக்கவில்லையா? பிரதி வருடமும் போப்ஸ் சஞ்சிகை உலகத்தின் கோடீஸ்வரர்களை வரிசைப்படுத்தி வெளியிட்டு அவர்களின் வெற்றியைப் பறைசாற்றுவதும் புகழ் பாடுவதும்

வழக்கம். ஆனால் அதே சஞ்சிகை அதிகம் வரிசெலுத்துவோர்களின் பட்டியலையும் வெளியிட்டு இரண்டு வரிசைகளிலும் உள்ள பெயர்கள் ஒன்றோடொன்று ஒத்ததாய் இருக்குமானால் உலகமே அந்தப் பெயர்களின் புகழ்பாடலாமல்லவா? ஆனால் ஏன் அந்த விபரங்கள் வெளியிடப்படுவதில்லை? கோடீஸ்வரரான அமெரிக்க ஜனாதிபதி டொனல்டு ட்ரம்ப் ஏன் அவர் செலுத்திய வரி விபரங்களை இன்னும் வெளிப்படுத்தவில்லை?

நவ-தாராண்மைப் பொருளாதாரங்களைப்பற்றி இதுவரை உங்கள் முன்வைத்த வாதங்கள் ஒட்டுமொத்தமாக எழுப்பும் ஒரே கேள்வி இந்தப்பொருளாதாரங்கள் எவரின் நலனுக்காகச் செயற்படுகின்றன என்பதாகும். மக்களுக்கிடையே தற்போது விரிவடையும் வருமான ஏற்றத்தாழ்வுபற்றி நான் ஏற்கனவே சுட்டிக்காட்டிய விகிதங்கள் இந்தக் கேள்விக்குரிய விடையைத் துல்லியமாக்குகின்றன. இதற்கிடையே சில பொருளாதாரங்கள் 1980களுக்குப் பின்னர் தாராண்மைப் பொருளியற் தத்துவத்தைத் தழுவியதால் வேகமான வளர்ச்சியைக் கண்டுள்ளன என்பதை நான் மறுக்கவில்லை. இந்தியாவையும் சீனாவையும் இந்த வளர்ச்சிக்குச் சிறந்த உதாரணங்களாகக் காட்டுவர். சீனா தன் பொருளாதாரக் கதவுகளைத் திறந்துவிட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்களையும் நவீன தொழில்நுட்பங்களையும் நுழையவிட்டதும் அதன் விளைவாகப் பொருளாதார வளர்ச்சியில் இரட்டை இலக்க வேகத்தைக் கண்டதும் உண்மை. ஆனால் சீன அரசு தாராண்மைப் பொருளியலாளர் கூறியதுபோன்று சந்தை என்ற பறவை பறப்பதற்குப் பூரண சுதந்திரம் வழங்கவில்லை. அப்பறவையைத் தான் அமைத்த ஐந்தாண்டுத் திட்டமென்ற கூட்டினுக்குள்ளேயேதான் பறக்கவிட்டது. தாராண்மைவாதத்தின் அரசியற் கரமான ஜனநாயகமும் அங்கில்லை.

இதுதான் தாராண்மைப் பொருளியலுக்குச் சீனப் பொதுவுடமைக் கட்சி பரிசாகக் கொடுத்த புதிய முகம். இந்தியாவும் பூகோளவாதத்தைப் பூரணமாகத் தழுவவில்லை. இன்னும் நேரு காலத்துச் சமவுடமைப் பொருளாதாரத்தின் அம்சங்கள் பல அங்கு காணப்படுகின்றன. ஆனால் தற்போதைய நரேந்திர மோடி ஆட்சி ஜனநாயக உரிமைகளைப் படிப்படியாகக் குறைத்து அமெரிக்க உறவையும் பலப்படுத்தித் தாராண்மைப் பொருளியலைப் பூரணமாகக் கொண்டுவரத் துடிப்பதைப் பல அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்தியாவின் இன்றைய பொருளாதாரக் கொள்கை புவிசார் அரசியலுடன் கலந்துள்ளமை அதன் தனித்துவம். இதைப்பற்றி மேலும் விபரிக்க நான் விரும்பவில்லை. பொதுவாக, எனது உரை தனிப்பட்ட பொருளாதரங்களின் வெற்றி தோல்விகளை எடைபோடுவதைவிட்டு இன்று பூகோளரீதியில் தலைவிரித்தாடும் ஒரு பொருளாதாரச் சித்தாந்தத்தின் சுய உருவத்தை வெளிக்காட்டுவதையே பிரதான நோக்காகக்கொண்டதாகும்.

இந்தச்சித்தாந்தம் அது வளர்த்துவிட்ட பன்னாட்டு நிறுவனங்களின் பொருளாதார நடவடிக்கைகளால் இயற்கையின் சூழல் மாசுபடுவதைப் பற்றியும், மனித உரிமைகள் மீறப்படுவது பற்றியும், குறைவிருத்தி நாடுகளில் தொழிலாளர்களின் வேதனங்கள் ஜீவனோபாயமட்டத்துக்கும் குறைவாக வழங்கப்படுவது பற்றியும், வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழிலாளர்களின் உரிமைகள் படிப்படியாகப் பறிக்கப்படுவது பற்றியும் கவலைப்படுவதேயில்லை. அவற்றையெல்லாம் சந்தைச் சக்திகளும் அச்சக்திகளை இயக்கும் போட்டி என்ற மந்திரமும் கவனித்துக்கொள்ளும் என்பது அதன் நம்பிக்கை. ஆனால், சிலரை எக்காலமும் ஏமாற்றலாம், பலரைச்

சிலகாலம் ஏமாற்றலாம், எல்லாரையும் எக்காலமும் ஏமாற்ற முடியாதென்பதுபோல் நவ-தாராண்மைப் பொருளியற் சிந்தனையின் சுய உருவத்தைக் கண்ட மக்கள் அதனை எதிர்க்கத் துணிந்துவிட்டனர்.

நவ-தாராண்மைப் பொருளியற் சிந்தனையை எதிர்த்துப் போராட்டங்கள் உலகெங்கினும் பல தோற்றங்களில் உருவாகியுள்ளன. சோவியத் பொதுவுடமை அமைப்பு சீர்குலையும் வரை முதலாளித்துவத்துக்கெதிரான போராட்டங்களெல்லாம் பொதுவுடமைக் குடையின் நிழலிலேதான் பெரும்பாலும் நிகழ்ந்தன. சோவியத்தின் சீர்குலைவுடன் அந்தக் குடை மூடப்பட்டுவிட்டது. அதனால் அதன்பிறகு நடைபெற்ற போராட்டங்கள் பூகோளமயவாக்கத்துகெதிரான போராட்டங்களாகவே தோன்றின. அந்தப் போராட்டங்களிற் பொதுவுடமைவாதிகளும், சமவுடமைவாதிகளும், மனிதஉரிமைப் போராளிகளும், பெண்ணியவாதிகளும், பசுமை இயக்கவாதிகளும், சூழல் பாதுகாப்பு இயக்கத்தினரும் எனப் பல்வேறுபட்ட குழுக்கள் பங்குபற்றலாயின. அவர்களெல்லோரையும் ஒன்றாய் இணைத்த ஒரே இலட்சியம் அமெரிக்க வல்லரசின் குடைநிழலில் வளரும் பொருளாதார உலகைத் தவிர்த்து யாவரும் சுபீட்சமாய் வாழக்கூடிய ஒரு புது உலகை உருவாக்கலாம் என்பதே. அந்த இலட்சியத்துடன் ஆரம்பமான முதலாவது போராட்டம் 1989இல் பாரிஸ் நகரில் ஆரம்பமானது. அதன் பின்னர் எங்கெங்கு உலக வங்கி, சர்வதேச நாணய நிதி, உலக வர்த்தக நிறுவனம், வடஅமெரிக்க தடையற்ற வர்த்தகச் சங்கம், பலதரப்பு முதலீட்டு உடன்படிக்கை போன்ற நவ-தாராண்மைப் பொருளியற் சிந்தனையின் பிரதிநிதித்துவ

அமைப்புகள் சந்தித்தனவோ, அங்கெல்லாம் இப்போராட்டம் தலைகாட்டத் தொடங்கின. 1999இல் அமெரிக்காவின் சியற்றில் நகரில், உலக வர்த்தக நிறுவனத்தின் மகாநாடொன்று நடைபெற்றபோது நிகழ்ந்த போராட்டம் வன்முறையில் முடிந்தது. இருந்தும் போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றன. அது உலகளாவிய ஒரு போராட்டமாக மாறுவதற்கு முன்னர், பின்-லாதனின் அல்-கைதா அமைப்பின் தீவிரவாதம் உலகத்தின் கவனத்தை வேறு திசையிற் திருப்பிவிட்டது. இது ஒரு வகையில் ஆளும் வர்க்கத்துக்குக் கிடைத்த எதிர்பாராத ஒரு அருட்கொடை எனலாம். அமெரிக்கா தலைமையில் தொடுக்கப்பட்ட பயங்கரவாதத்துக்கெதிரான போர் பூகோளமயவாக்கத்தின் எதிரிகளையும் பயங்கரவாதிகளாகக் கணிக்கக்கூடிய ஓர் ஆபத்தைத் தோற்றுவித்தது. அதனால் அப்போராட்டங்கள் சற்று அமைதியடைந்தாலும் 2008இல் நிகழ்ந்த உலக நிதி நெருக்கடி அவற்றிற்கொரு புதிய உத்வேகத்தை அளித்தன. அந்த நிதி நெருக்கடியைத் தொடர்ந்து கிரேக்க நாட்டில் ஏற்பட்ட பொருளாதார மந்தமும் கடன் பழுவும், 2011இல் வெடித்த அரபு வசந்தம், அதே ஆண்டில் அமெரிக்காவில் நடைபெற்ற சுவர் வீதி முற்றுகை ஆகிய எல்லாப் பிறழ்வுகளுமே நவ-தாராண்மைப் பொருளாதாரச் சிந்தனை தோற்றுவித்த விளைவுகளே. பேராசைகொண்ட பணத்தேட்டம், பன்னாட்டு நிறுவனங்களின் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகள், எல்லையற்ற வருமான ஏற்றத் தாழ்வு, சந்தைச் சக்திகள் உருவாக்கும் கடன் சுமை, வறுமை, பஞ்சம், பட்டினி, மக்களின் புலப்பெயர்வு யாவுமே இன்று நடைமுறையிலிருக்கும் பொருளாதார அமைப்பின் அவலட்சணமான மறுபக்கம் என்பதை மறுக்கமுடியாது.

கார்ள் மாக்ஸ் அன்று முன்வைத்த வாதமொன்றை இன்றைக்கு நாம்

மீட்டல்செய்ய வேண்டிய நிலை தோன்றியிருக்கிறது. சமதர்மச் சமுதாயமொன்றை உலகரீதியிற் கட்டியெழுப்பவேண்டுமென்று கனவு கண்ட மாக்ஸ் முதலாளித்துவம் உலகெலாம் பரவவேண்டுமென்று விரும்பினார். அதற்குக் காரணம் முதலாளித்துவத்தின்மேல் அவருக்குள்ள காதலல்ல. மாறாக, உழைக்கும் வர்க்கம் அப்போதுதான் முதலாளித்துவம் எந்த அளவுக்கு உழைப்புச் சக்தியைச் சுரண்டுகின்றதென்பதை உணர்ந்து புரட்சிவாதியாகமாறி முதலாளித்தவ அமைப்பைத் தகர்த்தெறியும் என்பதற்காக. ஆனால் முதலாளித்துவம் பூகோளமயமாகுமுன் லெனின் தலைமையில் நடந்த ருஷ்யப் புரட்சி மாக்ஸின் புரட்சிப் பாதையை இடைவழியிலே நிறுத்திவிட்டது. ஏறத்தாழ எழுபத்தைந்து வருடங்களாக மூடப்பட்டிருந்த இந்தப் பாதை சோவியத் மறைவினால் மீண்டும் திறந்துவிடப்பட்டுள்ளது. ஆதலினால் சோவியத்தின் மறைவு ஒரு வகையில் முற்போக்கு இயக்கத்துக்குக் கிடைத்த நன்மையென்று கூறுவேன். இன்று நவ-தாராண்மைப் பொருளாதார அமைப்பு பூகோளமயமாகியிருப்பது மாக்ஸின் பாதை தொடர்வதற்கு ஏதுவாயமைந்துள்ளது. ஆங்காங்கே வெவ்வேறு சூழல்களில் நிகழும் எதிர்ப்புகளை ஒரே குடையின்கீழ் கொண்டுவந்து உலகளாவிய ரீதியில் ஒரு மாற்றுப் பொருளாதார அமைப்பை நிறுவும் நோக்குடன் பொருளியற் கலை செயற்படவேண்டியுள்ளது. பொருளியற் கலையைப்பற்றி எனது சிந்தனைகள் சிலவற்றை இங்கே பகிர்ந்துகொள்வதற்கு முன்னர் இன்னுமொரு பொருளாதாரப் பிரச்சினையைப் பற்றிச் சில வார்த்தைகளைச் சுருக்கமாகக் கூறலாமென நினைக்கிறேன். இன்று எல்லா நாடுகளும், எல்லா அரசுகளும் பொருளாதார வளர்ச்சிகாணத்துடிக்கின்றன. இந்த வளர்ச்சியை எவ்வாறு

அடையலாம் என்பதை விளக்கப் பல் வேறு வளர்ச்சி மாதிரிகளை மாணவர்களுக்கு நாம் அழகான வரைப்படங்களுடனும் கணிதச் சமன்பாடுகள்மூலமும் போதிக்கின்றோம். இம்மாதிரிகள் எல்லாமே நவ-தாராண்மைப் பொருளாதாரச் சிந்தனையின் வெவ்வேறு தோற்றங்கள் என்பதை மறத்தலாகாது. ஆனால் இந்த வளர்ச்சியின் விளைவுகளை ஆராயும்போது அது இயற்கைச் சூழலுக்குப் பங்கமாகவும், மக்களிடையே வருமான ஏற்றத்தாழ்வுகளை விரிவாக்கும் நோக்கமுடையதாகவும், தடையற்ற சந்தைப் போட்டி என்ற போர்வையில் உண்மையிலேயே தனியுரிமைக்கும் சிலருரிமைக்கும் தூண்டுதல் அளிக்கும் ஓர் உபாயமாகவும் விளங்குகின்றதென்பதை ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். அவ்வாறாயின் ஏன் அரசுகள் தமது பொருளாதாரக் கொள்கைகளிலும் திட்டங்களிலும் வளர்ச்சிக்கு முதலிடம் வழங்க வேண்டும்? இந்தச்சிந்தனை இன்று வளர்ச்சியடைந்த நாடுகளில் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் வளர்ந்து வருகிறது. ஆனால் இந்தச் சிந்தனை வளர்ச்சியடையா நாடுகளை வளராமற் செய்வதற்குக் கையாளப்படும் ஒரு சூழ்ச்சியென்ற குரலையும் நாம் அந்நாடுகளிலிருந்து கேட்கிறோம். இது தவறான ஒரு கேள்வி. வளரும்போதே வளர்ச்சிகண்ட நாடுகள் தமது வளர்ச்சியை இயற்கைச் சூழலை மாசுபடுத்தாத முறையில், வருமான ஏற்றத் தாழ்வுகளை மட்டுப்படுத்தி, தார்மீகமற்ற போட்டியைத் தவிர்த்துக் கூட்டுறவின் அடிப்படையில் பொருளாதார வளர்ச்சியடைந் திருக்குமானால், இன்று உலகத்தை அழிவுப்பாதையில் வழிநடத்தும் பொருளாதாரக் கொள்கைகளைத் தவிர்த்திருக்கலாம். அவ்வாறான ஒரு வளர்ச்சி வளர்ந்துவரும் நாடுகளுக்குத் தேவையா என்ற கேள்வியை முன்வைத்துத்தான் வளர்ச்சிக்கு முதலிடம் கொடுக்கும்

விவாதம் எழுந்துள்ளது. பொருளாதாரம் வளர்ந்தால் மக்கள் நலன் பெருகும் என்ற பழைய பல்லவியை மாற்றி, மக்கள் நலமானால் பொருளாதாரம் தானே வளரும் என்ற ஒரு புதுப் பாடலுக்கு இசை அமைக்கின்றது இந்தக் கேள்வி.

தமிழாசான் வித்தியானந்தனை நினைவுகூரும் இந்த உரையில் பொருளாதார வளர்ச்சிபற்றி நான் கூறிய கருத்தைத் தமிழின் கோணத்திலிருந்து நோக்கினால் தமிழைக் காப்போம், தமிழை வளர்ப்போம் என்று ஒருகாலத்தில் கூக்குரலிட்டவர்கள் தமிழனைக்காக்க மறந்ததுபோல் இன்று பொருளாதாரத்தை வளர்ப்போமென்று கூச்சல்போடுபவர்களும் மக்களின் நலனை வளர்க்க மறக்கிறார்கள். தமிழன் வாழ்ந்தால் தமிழும் தானே வளரும். அதேபோன்று மக்கள் நலன் பெருகினால் பொருளாதாரமும் தானே வளரும். இதனையே பல ஆண்டுகளுக்கு முன்னர் வறுமைத் திரை என்ற நூலை எழுதிய முன்னைய உலக வங்கி ஆலோசகரும், பாகிஸ்தானியப் பொருளியலாளருமான மஹ்பூப் அல்-ஹக் உள்நாட்டு மொத்த உற்பத்தியைப்பற்றிக் கவலை கொள்ளாமல் மக்களைப்பற்றிக் கவலை கொள்ளுங்கள். உள்நாட்டு மொத்த உற்பத்தி தானே தன்னைக் கவனித்துக்கொள்ளும் என்றார்.

துரதிஷ்டவசமாக பொருளியற் கலையின் இன்றையப் போக்கு தாராண்மைப் பொருளாதார அமைப்புக்கு வக்காலத்துவாங்கும் ஒரு கலையாக மாறியுள்ளமை ஏமாற்றத்தைத் தருகின்றது. இதைப்பற்றிச் சிறிது விரிவாய் விளக்க விரும்புகிறேன். பொருளியற்கலை மக்களின் பொருளாதார உறவுகளோடும், அவர்கள் வாழும் சமூகச் சூழலோடும் நெருங்கிய தொடர்புடையது.

சமூகத்தின் அரசியலமைப்பு, அதன் கலாசாரப் பாரம்பரியங்கள், மத நம்பிக்கைகள் போன்றவை பொருளியல் ஆராயும் பிரச்சினைகளில் தலையிடுவதைத் தவிர்க்கமுடியாது. பொருளியல் கூறும் எத்தனையோ உண்மைகளும், விதிகளும் சாதாரண மக்களின் சிந்தனையில் ஏற்கனவே நடமாடியுள்ளவைதான் என்பதையும் ஆதலால் பொருளியல் விற்பன்னர்கள் எதையும் விஞ்ஞானிகளைப் போல் புதிதாகக் கண்டுபிடிப்பதில்லை என்பதையும், கெனத் கல்பிறைத் அவரெழுதிய "பொருளியலின் வரலாறு" என்ற நூலில் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார். இவரது கருத்தை மையமாகக்கொண்டு "பழமொழி கூறும் பொருளியல் உண்மைகள்" என்ற தலைப்பில் 2008இல் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற ஒரு தமிழ் மகாநாட்டில் நான் ஒரு கட்டுரை சமர்ப்பித்து அக்கட்டுரை மகாநாட்டு இதழில் வெளிவந்தது ஞாபகம். ஆனால் தற்காலப் பொருளியற் சிந்தனை பொருளியலை ஓர் இயல்புரை அறிவியலாகக் கருதி அது ஆராயும் பிரச்சினைகளை அரசியல், கலாசாரம், மத நம்பிக்கைகள் போன்றவற்றிலிருந்து நீக்கி அதனையும் மற்றைய இயற்கைச் சாஸ்திரங்களான பௌதிகம், இரசாயனம், மருத்துவம், போன்ற விஞ்ஞானக் கலையாக மாற்றியுள்ளது. சுருக்கமாகக் கூறினால் இன்று பொருளியல் ஒரு கணிதவியலாக மாறிவிட்டது. பளபளப்பான அட்டைகளுக்குள் பல நூறு பக்கங்களில் வண்ணவண்ண வரைப்படங்களுடனும், காலங்கடந்த புள்ளி விபரங்களுடனும், கணிதச் சமன்பாடுகளுடனும் வெளிவரும் பொருளியற் பாடப்புத்தகங்கள் மாணவர்களுக்கு அந்தச் சமன்பாடுகளின் தீர்விலேதான் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வுண்டு என்ற ஒரு மாயையைத் திணிக்க முற்படுகின்றன. இவ்வாறு நான்கூறுவதால் கணித அறிவும் புள்ளிவிபர

ஆதாரங்களும் பொருளாதாரப் பிரச்சினைகளை ஆராய்வதற்கு அவசியமற்றவையென்று விவாதிக்கவில்லை. மாறாக, அல்பிரட் மார்ஷல் ஏற்கனவே பொருளியலின் கணிதமயப்போக்கைப்பற்றி எச்சரித்ததுபோல் பொருளியற்கலை மீண்டும் தனது உள்ளடக்கத்தை அரசியல், சமூகவியல், வரலாற்றியல், புவியியல் போன்ற இன்னோரன்ன துறைகளையும் சார்ந்த ஒரு விரிவான கலையாக மாறவேண்டுமென்பதையே வலியுறுத்துகிறேன்.

1970களில் வியட்னாம் யுத்தம் அதன் உச்சநிலையிலிருந்த போது, அமெரிக்க, ஐரோப்பியப் பல்கலைக்கழக மாணவர்கள் யுத்த எதிர்ப்புப் போராட்டத்தில் இறங்கினர். அந்தப் போராட்டம் படிப்படியாக அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கெதிரான போராட்டமாகவும், அந்த ஏகாதிபத்தியத்துக்காதரவாக இயங்கிய உயர் கல்விக்கூடங்கள், அங்கே புகட்டப்பட்ட கல்விமுறைகள், அக்கல்வியின் உள்ளடக்கம் ஆகியவற்றிற்கெதிரான ஒரு மாணவப் போராட்டமாகவும் மாறியமை அரசாங்கங்களுக்கும் கல்வி நிலையங்களுக்கும் பெரும் தலையிடியைக் கொடுத்தது. இந்தப் போராட்டங்களில் களமிறங்கிய மாணவர்களுள் பெரும்பகுதியினர் சமூகவியல், பொருளியல், அரசறிவியல், வரலாற்றியல் போன்ற கலைத்துறை மாணவர்களாகும். ஒருபக்கம் பாதுகாப்புத்துறையினர் இப்போராட்டத்தைப் பலத்த வன்முறையோடு நசுக்க மறுபக்கம் எத்தனையோ பல்கலைக்கழகங்கள் அரசாங்கங்களின் கல்விக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றங்களால் கல்விப் பட்டங்களை விற்பனைசெய்யும் கடைகளாக மாறத்தொடங்கின. நலன்புரி அரசுகள் ஏற்கனவே நாம் கூறியதுபோன்று மக்கள் நலச் செலவுகளைக் குறைத்து மருத்துவம், கல்வி, ஆகிய துறைகளை

இயன்ற அளவுக்குத் தனியார் துறைக்குப் பாரம்சாட்டியதால் பல்கலைக் கழகங்களும் இலாபநோக்கங்கொண்ட நிறுவனங்களாக மாறி, மாணவர்களை வாடிக்கையாளர்களாகக் கருதி, அவர்கள் கற்கும் பாடங்களையும் விற்பனைச் சரக்காக மாற்றினர். தமது வருமானத்தை மாணவர்களிடமிருந்து அறவிடும் அனுமதிக் கட்டணம் மூலம் திரட்டத்தொடங்கின. பட்டப்படிப்புப் பாடங்களின் தொழில்வாய்ப்புத் திறனுக்கேற்ப அப்பாடங்களின் அனுமதிக் கட்டணங்களும் வேறுபடலாயின. பணம் செலவழித்துப் பெறப்படும் கலைத்துறைப் பட்டங்களால் தொழில்வாய்ப்புக் குறைவென உணர்ந்த மாணவர்கள் அக்கலைகளைக் கைவிட்டு நிதியியல், முகாமைத்துவம், கணக்கியல், தகவல்தொழில் நுட்பம் போன்ற தொழில் வாய்ப்புள்ள பாடங்களைக் கற்கத் தொடங்கியதால் சமூகவியல், வரலாற்றியல், அரசறிவியல், பொருளியல் போன்ற பாடங்களுக்கு மாணவர்களிடையே கிராக்கி குறைந்தது. இந்த நிலையிலேதான் பொருளியலும் தன்னைக் கலைத்துறைக் குடும்பத்துக்குள்ளிருந்து விடுவித்து விஞ்ஞான, தொழில்நுட்பக் கலைகளுக்குள் ஓர் அங்கத்தவனாகச் சேரும் முகமாகத் தன்னை மாற்றத் துணிந்தது. இதன் விளைவாகவே பொருளியல் மனித வாழ்வினதும், சமூகத்தினதும் அன்றாடப் பிரச்சினைகளின் பல்வேறுபட்ட அம்சங்களையும் உள்ளடக்கிய ஓர் உன்னத கலையாக இருந்து இப்போது அது கணிதமயமாகிய ஒரு தொகைவாரிக் கலையாக மாறிற்று. இதனால் ஏற்படும் விபரீத விளைவுகளை ஓர் நிதியியல் உதாரணத்தைக் கொண்டு விளக்க விரும்புகிறேன்.

டேவிட் எக்ஸ் லி என்பவர் ஒரு சீன நிதியியல் நிபுணர். இவர்தான் நிதியியலில் கோசியன் கொப்யுலா என்றழைக்கப்படும்


மாதிரியை அறிமுகப்படுத்தியவர். இம்மாதிரி, அடகுவைத்துக் கடன்பெற்ற கடன் பத்திரங்களுக்கு எவ்வாறு நிதிச் சந்தையில் விலையை நிர்ணயிப்பது என்பது பற்றியதாகும். அவர் அந்த மாதிரியை நிதியியலில் அறிமுகப்படுத்தும்போது தனது மாதிரி சென்றகாலச் சந்தைகளின் புள்ளிவிபரங்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டதென்றும், அந்த விபரங்கள் இன்றையச் சந்தைகளின் மாற்றங்களோடு ஒப்பிடுகையில் பொருத்தமுள்ளதாக இருக்காதென்றும், எனவே, அந்த மாதிரியை முற்றாக அமுல்படுத்த நினைப்பது ஆபத்தில் முடியலாமெனவும் ஓர் எச்சரிக்கையை விடுத்திருந்தார். ஆனால் 2007இல் அமெரிக்க வங்கிகள் அந்த எச்சரிக்கையை உதறித்தள்ளிவிட்டுக் கண்மூடித்தனமாக அவரது கணிதமாதிரியைத் தழுவி வீட்டுக் கடன் வழங்கியதால் வங்கிகளே வங்குறோத்தானதும் உலகப் பொருளாதார நெருக்கடிக்கு அது வழிவகுத்ததும் இப்போது எல்லாரும் அறிந்த வரலாறு. இந்த ஆபத்தைத்தான் கணிதமயமாகும் பொருளியலும் தனது பொருளாதார வளர்ச்சிபற்றிய மாதிரிகளில் கொண்டுள்ள தென்பதையும் ஆதலால் இந்த மாதிரிகளை மையமாகவைத்துப் பொருளாதாரக் கொள்கைகளை அரசுகள் வகுப்பது பல பிரச்சினைகளை உண்டாக்கும் என்பதையும் பொருளியல் கற்பிப்போர் தமது மாணவர்களுக்கு உணர்த்தவேண்டும்.

பொருளியல் கணிதமயமாகும் அதே வேளையில் பொருளாதார வரலாறு, பொருளியல் சிந்தனை வளர்ச்சி ஆகிய இரு பாடங்களும் இன்று பல்கலைக் கழகப் பொருளியல் துறையினால் ஒதுக்கப்பட்டுவருவது கவலைக்கிடமான ஒரு வளர்ச்சி. இதுவும் நவ-தாராண்மைச் சிந்தனையின் ஒரு பிரதிபலிப்பென்றால் மிகையாகாது.

அண்மையில் இந்தியாவில் நடைபெற்ற ஒரு பொருளியல் பேராசிரியர்கள் மகாநாட்டிலும் இக்குறை எடுத்துரைக்கப்பட்டது. மனிதன் போன பாதையை மறந்து போவதால் நாம் போகும் பாதை நேர்பாதைதானா என்பதைத் திட்டவட்டமாக அறியமுடியாது. இன்றைய தொழில்நுட்ப மாற்றங்கள் பல்கலைக்கழகப் படிப்பையே தலைகீழாக மாற்றியுள்ளதென்பது உண்மை. கணினியும் இணையத்தளமும் மாணவர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கு மிடையே இருக்கவேண்டிய நேர்முகத் தொடர்பை வெகுவாகக் குறைத்துவிட்டன. இந்தப் போக்கு நீடிக்குமானால் விரிவுரை களில்லாத பல்கலைக்கழகங்களும் அவற்றினுள் புத்தகங்களில்லாத நூல்நிலையங்களும் இயங்குவது வெகு தூரத்திலில்லை. பொருளியலைப் பொறுத்தவரையில் பல்கலைக்கழகங்களின் நவீன இணைப்புநிலைக் கல்விமுறை பொருளாதாரப் பிரச்சினை களையிட்டு மாணவர்களும் விரிவுரையாளரும் விரிவாக உரையாடும் தேவையைக் கட்டுப்படுத்தியுள்ளதால் எந்த வினாவுக்கும் விஞ்ஞான பாடங்களிற்போன்று அச்சொட்டான விடையைத் தேடும் ஒரு பாடமாக அது மாறிவிட்டது. அவ்வாறான ஒரு விடை பொருளியலிற் கிடையாதென்பதை இப்போதனாமுறை மறைத்துவிட்டது. நவ-தாராண்மைச் சிந்தனை பூகோளமயமாகுவதற்கு இணைப்புநிலைக் கல்விமுறையும் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளதை எம்மால் மறுக்கமுடியாது.

ஆகவே, பொருளியற்கலை மீண்டும் அரசியல், சமூகவியல், வரலாற்றியல் சார்ந்த ஒரு கலையாக மாறவேண்டுமென்பதை வலியுறுத்துவேன்.

UNIVERSITY OF JAFFNA
LIBRARY



கலாநிதி அமீர் அலி கிழக்கிலங்கையின் காத்தான்குடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் சாகித்தியமண்டலப் பரிசுபெற்ற பிரபல முஸ்லிம் கவிஞர் அப்துல் காதர் லெப்பையின் ஏக புத்திரர். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பொருளியற்றுறையில் சிறப்புப் பட்டம்பெற்று 1965லிருந்து 1967 வரை கனிஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றியவர். இலங்கைப் பல்கலைக் கழகத்தில் பொருளியற் கலையைத் தமிழிலே கற்பித்த இரு முன்னோடி விரிவுரையாளர்களுள் ஒருவர் நல்லதம்பி பாலகிருஷ்ணன், மற்றவர் அமீர் அலி. 1970ல் லண்டன் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப்பட்டத்தைப் பெற்று ஏழுவருடங்கள் மீண்டும் பேராதனையில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணிபுரிந்தவர். 1977ல் அவுஸ்திரேலியா சென்று கலாநிதிப் பட்டம்பெற்று மேற்கு அவுஸ்திரேலியப் பல்கலைக்கழகம், புருணை தாருஸ்ஸலாம் பல்கலைக்கழகம், கேட்டின் பல்கலைக்கழகம், மேர்டொக் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் பேராசானாகப் பணியாற்றி இன்று தனியே ஓர் ஆய்வாளராக மேர்டொக் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றுகிறார். ஜோன் ஹவாட் அரசாங்கத்தில் முஸ்லிம் விவகார ஆலோசகராக நியமிக்கப்பட்டவர். சர்வதேச ரீதியில் மத நல்லிணக்க மகாநாடுகளில் அவுஸ்திரேலியப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டவர். பொருளியலிலும், தமிழிலும், முஸ்லிம்களின் தற்கால நிலையிலும் ஆர்வம் கொண்டு பல ஆய்வுகளைச் சர்வதேச ஆய்வேடுகளில் வெளியிட்டுள்ளார். புருணை தாருஸ்ஸலாம் பொருளாதார வளர்ச்சி பற்றிய இவரது நூல் மறுபதிப்பைக் காத்திருக்கிறது. இவர் இஸ்லாமியப் பற்றுள்ள ஒரு யதார்த்தவாதி.

Virus Printers Inuvil